பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 27 திங்கட்கிழமை (10-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:197

# புதனன்று பூரண ஹர்த்தால்!

யாழ்ப்பாணம்,ஜூன்10

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசுத் தரப்பு காட்டிவரும் அசமந்தப்போக்கைக் கண்டித்தும் - உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் குடாநாடு எங்கும் நாளைமறுதினம் புதன்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வீடுகளில் தங்கியிருந்து தங்கள் ஒன்று திரண்ட எதிர்ப்பையும் ஆட்சேபத்தையும் அமைதியான முறையில் வெளிப்படுத்துமாறு யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (2ஆம் பக்கம் பார்க்க)

## சோனப்பு மயானத்தில் சோகக் கடலாக மக்கள்

# ஆயிரக்கணக்கானோர் கண்ணீர்மல்க அமரர் சிவாவின் உடல் தீயில் சங்கமம்!

கரவெட்டி,ஜூன்10

ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சொரிய பெருந்தலைவர் சிவசிதம்பரத்தின் புகழுடல் நேற்றுப் பிற்பகல் கரவெட்டியில் தீயுடன் சங்கமமாகியது.

அமரரின் குடும்ப மயானமான சோனப்பு இந்து மயானத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணி 35 நிமிடமளவில் அவரது சிதைக்கு மகன் சத்தியேந்திரன் தீமூட்டினார்.



சிவசிதம்பரத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அவரது குடும்ப உறுப்பினர்கள். மருமகள் - திருமதி கமலினி சத்தியேந்திரன், மகன் - சிவசிதம்பரம் சத்தியேந்திரன், மகள் - திருமதி நிராஞ்சலி தேவராஜ், மனைவி திருமதி சாரதாதேவி சிவசிதம்பரம், பேரன் - சத்தியேந்திரன் தயாபரன்.

அப்போது சோனப்பு மயானம் சோகத்தில் ஆழ்ந்தது. திரண்டிருந்தோரின் கண்கள் பனித்தன.


தமிழ் இனத்தின் விடுதலைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த பெருமனிதருக்கு மக்கள் தங்கள் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கினர்.

கரவெட்டியில் உள்ள இல்லத்தில் நேற்றுக்காலை முதல் சமயச் சடங்குகள் நடந்தன. அன்னாரின் குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களும் அங்கு கூடியிருந்தனர்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் காலைமுதல் கரவெட்டிக்கு வந்துசேரத் தொடங்கினர். மாணவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என்று பலதரப்பட்டோரும் அஞ்சலி செலுத்த வந்தனர்.

கல்வித்துறையினர், அரச அதிகாரிகள், மதத்தலைவர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்தோர், பொலீஸ் அதிகாரிகள், படையினர் என்று பலரும் இறுதிச் சடங்கில்

(12ஆம் பக்கம் பார்க்க)



சோனப்பு மயானத்தில் தலைவர் சிவசிதம்பரத்தின் உடல் தகனம் செய்யப்பட்ட சிதையின் தோற்றம்.



சிதை தீயில் எரிகின்ற காட்சி. (மேலும் படங்கள் மூன்றாம் பக்கத்தில்.)

# 18 ஜெனரேட்டர்களும் வந்தன; ஜூன் 30 முதல் மின்விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய மின்நிலையத்தில் பொருத்துவதற்காக 18 பாரிய ஜெனரேட்டர்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

ஜெனரேட்டர்கள் மற்றும் மின்நிலையத்துக்கான இதர உதிரிப்பாகங்கள் அடங்கிய 18 கொன்ரெயினர்கள் 22 வாகனங்களில் நீண்ட தொடர் அணியாக கண்டி வீதி வழியே எடுத்துவரப்பட்டன. நேற்று முன்னிரவு 15 ஜெனரேட்டர்கள் சுன்னாகம் மின்நிலையத்தை வந்தடைந்தன.

இரண்டு கொன்ரெயினர்கள் ஏற்றப்பட்ட வாகனங்கள் பழுதடைந்ததால் அவை வழியில் தரித்துநிற்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

ஜெனரேட்டர்களை ஏற்றிவந்த நீண்ட வாகன அணியை கண்டிவீதி யோரம் மக்கள் கூடிநின்று பார்த்துப் பிரமித்ததைக் காணமுடிந்தது. வாகன அணியுடன் பாரம் தூக்கும் கனரக வாகனம் ஒன்றும் உடன்வந்தது.

ஜெனரேட்டர்களைப் பொருத்தும் பணிமுடிவடைந்ததும் எதிர்வரும் 30 ஆம் திகதி மின்நிலையம் இயங்கத் தொடங்கும். மின் நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் மின்சக்தி, வலு அமைச்சர் கரு ஜெயசூரியா கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் கரு ஜெயசூரியா நேற்று மின்நிலையத்தைப் பார்வையிட்டார். 24 மணிநேர மின்விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மின் இணைப்புப் பணிகளைப் பூர்த்தி செய்யுமாறு அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். (ஐ)

# இலங்கைக்கு பிரிட்டனின் இரசாயன ஆயுதங்கள்!

லண்டன்,ஜூன்10

அமெரிக்காவினால் 'தீவினையின் தளங்கள்' என்று வர்ணிக்கப்பட்ட ஈரான், லிபியா, சிரியா, இஸ்ரேல் உட்பட 26 நாடுகளுக்குப் பிரிட்டன் இரசாயன ஆயுதத் தொழில்நுட்பத்தை வழங்கிவருகிறது. சர்வதேச சட்டங்களின் கீழ் தடைசெய்யப்பட்டவையும், இரசாயன ஆயுதங்கள் சாசனத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டவையுமான பேரழிவு இரசாயனப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை பிரிட்டன் அனுமதித்து வருகிறது.

'சண்டே ஹெரால்ட்' பத்திரிகை இந்த விவரங்களைக் கண்டறிந்து அம்பலப்படுத்தியிருக்கிறது. இவற்றின் ஏற்றுமதிக்கு பிரிட்டனின் வர்த்தகக் கைத்தொழில் திணைக்களம் அனுமதி வழங்குகிறது. இந்த இரசாயனப் பொருள்கள், ஏற்றுமதி செய்யப்பட்டபின் இரசாயன ஆயுதங்கள் செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறதா, இல்லையா என்பதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அத்திணைக்களம் கூறுகிறது.

பிரிட்டன் இவ்வகைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில ஒன்று சூடான். இது பயங்கரமான மருந்தொன்றைத் தயாரித்ததாகக்கூறி அமெரிக்கா 1998 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுசரணையுடன் சூடானின் அத்தொழிற்சாலையைக் குண்டுவீசி அழித்தது.

பிரிட்டன் இரசாயன ஆயுதங்களை விற்கும் நாடுகளில் இலங்கை, பாகிஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மீனவரின் மறியல் போராட்டம் மீண்டும் இன்றுமுதல் தொடரும்!

குருநகர்,ஜூன்10

வார விடுமுறை தினங்களை அடுத்து நேற்றும், நேற்றுமுன்தினமும் இடைநிறுத்தப்பட்டிருந்த மீனவர்களின் மறியற்போராட்டம் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

சுதந்திரமாக தொழில்செய்வதறகு மீனவர்களை அனுமதிக்கவேண்டும் என்றும் -

கரையோரங்களில் உள்ள மீனவர் குடியிருப்புகளில் இருந்து படையினர் வெளியேறவேண்டும் என்றும் கோரி கடந்த வியாழக்கிழமைமுதல் யாழ்.செயலகம் மற்றும் யாழ்.பிரதேச

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி யின் பதவிக்காலம் மேலும் ஒருவருடம் நீடிப்பு

கொழும்பு,ஜூன்10

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவிக்காலம் ஜூன் 14ஆம் திகதி முதல் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜெனரல் றொஹான தளுவத்த வகித்துவந்த கூட்டுப்படைகள் தளகர்த்தர் பதவியும் பலகல்ல

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சமாதான முயற்சிகள் முடக்கமா?

# நோர்வே அப்படிக் கூறவில்லையே!

## இந்தியப் பத்திரிகையாளரிடம் பிரதமர் ரணில்

கொழும்பு,ஜூன்10

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை அரசு நீக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையும் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் சமாதான நடவடிக்கைகள் முடங்கிப் போயிருக்கின்றன. என்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனரே இதை ஒப்புக்கொள்கிறீர்களா என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோது -

அவ்வாறான கருத்தை நோர்வே சமாதானக் குழுவினர் தம்மிடம் தெரிவிக்கவில்லை என்று அவர் பதிலளித்திருக்கிறார்.

இந்தியச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியின்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமரிடம் இந்தக் கேள்வியை கேட்டவர் சென்னை 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளர் நிருபமா சுப்பிரமணியம்.

பிரதமர் இந்தியாவுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தபோது பிரதமரை அவர் சந்தித்தார். அவருடைய மற்றும் பல கேள்விகளுக்கு பிரதமர் பதிலளித்தார்.

★ *கேள்வி:* தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அதன் தலைவர் இந்தியாவினால் (ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாக) தேடப்படுபவராக இருக்கிறார். இது உங்கள் முயற்சியைப் பாதிக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

◆ *பதில்:* அவர் தேடப்படும்நிலை எப்பொழுதும் இருந்து வருகிறது. ஆனால் இந்திய அரசும் அரசியல் கட்சிகளும் எங்கள் சமாதான முயற்சிகளை ஊக்குவித்து வருகின்றன. ஆதரவு வழங்குகின்றன. நாம் இலங்கையில் சமாதான முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு முன்னேற்றம் காணவேண்டியதுதானே.

★ *கேள்வி:* அது ஒன்றுக்கொன்று முரண் இல்லையா? சமாதான முயற்சியை ஊக்குவிக்கிறார்கள். அதே வேளை புலிகள் மீதோ பிரபாகரன் மீதோ தமது கடும் போக்கை கைவிடுகிறார்கள் இல்லையே!

◆ *பதில்:* சமாதான முயற்சிகளை அவர்கள் ஊக்குவிக்கிறார்கள் என்றால் அதில் புலிகளோடு பேசுவதும் அடங்கியிருக்கிறது யதார்த்தம் என்னவென்றால் புலிகள் மீது இந்திய நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் இருக்கின்றன. பிரபாகரனை நாடு கடத்தும்படி கோரிக்கையும் வருகிறது. அரசியலில் எப்பொழுதும் முரண்பாடு கொஞ்சமேனும் இருக்கத்தான் செய்யும்.

★ *கேள்வி:* உங்களுடைய இடைக்கால நிர்வாகத் திட்டத்தை இந்தியா ஆதரிக்குமா?

◆ *பதில்:* இடைக்கால நிர்வாகம் இருக்கவேண்டும் என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் இடைக்கால நிர்வாகம் தான் முக்கிய விடயங்களில் ஒன்றாக சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

★ *கேள்வி:* இடைக்கால நிர்வாகத்துடன் அடிப்படை அரசியல் விடயங்கள் தொடர்புபடுத்தப்படும் என்று நீங்கள் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கூறியது பற்றிப் புலிகள் கவலை தெரிவித்திருக்கிறார்களே?

◆ *பதில்:* அடிப்படை அரசியல் விடயங்கள் என்ற சொற்களை நான் பயன்படுத்தவில்லை.

★ *கேள்வி:* புலிகள் மீதான தடையை நீங்கள் இன்னும் நீக்கவில்லை. போர் நிறுத்த உடன்படிக்கை (புரிந்துணர்வு உடன்படிக்கை) சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனாலதான் சமாதான நடவடிக்கைகளுக்கு தடங்கல் ஏற்பட்டிருக்கிறது என்று புலிகள் கூறுகிறார்களே?

◆ *பதில்:* அந்தக் கருத்தை நோர்வே அனுசரணையாளர்கள் எனக்குத் தெரிவிக்கவில்லை. உடன்படிக்கை அமுலுக்கு வந்தநாள் முதல் 90 நாளகள் வரையான விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கைக் கண்காணிப்புக் குழு எல்லாவற்றையும் கவனித்து வருகின்றது. வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி மற்றப் பகுதிகளிலும் வாழும் மக்களின் வாழ்க்கையில் முதன்முறையாக பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சமாதான முயற்சி தடங்கலின்றி தொடர்கிறது.

★ *கேள்வி:* தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்கிறீர்களா? புலிகள் பற்றிய அவரது நிலைப்பாட்டை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்.

◆ *பதில்:* அவருடைய நிலைப்பாடு ஒன்றும் புதியதல்ல. இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்குமிடையே பாலம் அமைப்பது பற்றி இந்திய அரசுடன் பேசப்போகின்றேன். பால விஷயம் தமிழ் நாட்டுடனும் தொடர்புடையது. அதனால் அவருடனும் பேசுவேன். அதைவிட அவருடன் பேசுவதற்கு வேறு பல விடயங்களும் உள்ளன.

(ஐ)

# சமாதான முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவு!

## வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்கிறார் மொறகொட

இந்தியாவின் முழு ஆதரவுடன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிக்கு பிரதமர் வாஜ்பாயும் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியும் தமது முழு ஆதரவையும் வழங்க முன்வந்துள்ளனர். ஆளும் தரப்பினரும் எதிரணியினரும ஏககாலத்தில் உதவ முன்வந்திருப்பது ஓர் அரியவாய்ப்பு. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடக் கூடாது.

பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஆரமப ஏற்பாடுகளை மேற்கொள்ள புதுடில்லியில் தங்கியிருக்கும் அமைச்சர் மிலிநத மொறகொட, பல மட்டங்களிலும் மேற கொண்ட பேச்சுக்களின் பின்னரே இப்படி நம்பிக்கை தெரிவித்தார்.

புதுடில்லி தாஜ்பெலஸ் ஹோட்டலில் அமைச்சர் மிலிந்த மொறகொட சனியிரவு செய்தியாளர்கள் மத்தியில பேசினார்.

இரண்டாவது தடவையாக இந்திய தலைவர்களைச் சந்திக்கவிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தபின் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடுவார்.

பிரதமரின் இந்திய விஜயம் இரண்டு அடிப்படை நோக்கங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான இந்தியாவின் ஆதரவைப் பெறுவது. இரண்டாவதாக இலங்கை - இந்திய வர்த்தக கூட்டுஒப்பந்தம், பொருளாதார அபிவிருத்தி பற்றி ஆராய்வது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்குவதன் மூலம் இந்தியன் ஒயில் கம்பனி பல கோடி ரூபாவை இலங்கையில் முதலீடு செய்யவுள்ளது.

இந்திய முதலீட்டாளர்கள் டுபாயில் பெரும் தொழில்பேட்டைகளை நடத்துகின்றனர். இலங்கை - இந்திய வர்த்தக உடன்படிக்கையின்மூலம் இந்திய முதலீட்டாளர்களை எமது நாட்டின் பக்கம் ஈர்க்கமுடியும்.

இன்று திங்கட்கிழமை புதுடில்லி வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், நிதி அமைச்சர், வர்த்தக அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சோனியாகாந்தி ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவார். தமிழகத்தில் ஆளுநர், முதலமைச்சர் உட்பட பல தலைவர்களையும் சந்திப்பார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு மேலும் தெரிவித்தார்.(ஐ-9)

# புதனன்று பூரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் நேற்றுமுன்னிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நூறு நாள்கள் கடந்துவிட்ட நிலையிலும், உடன்படிக்கையில் கூறப்பட்ட பல விடயங்கள் அரசினால் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இயல்பு நிலைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய புதிய பல நடவடிக்கைகளும் இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக -

✪ மீன்பிடித்தடை முற்றாக நீக்கப்படாமை -

✪ மீன்பிடி தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான வகையில் புதிய நடைமுறைகள் 23-05-2002 விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டமை -

✪ புதிய இராணுவ நிலைகள் அமைக்கப்படுகின்றமை -

✪ எமது தாயகப் பிரதேசத்து பொருளாதார வளங்கள் வெளிநாட்டவர்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றமை -

✪ புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக்கப்பட்டு நூறுநாள்கள் கடந்த பின்பும் பாடசாலைகள், வணக்கத் தலங்கள், பொதுக்கட்டடங்களில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேறாமை -


✪ பனை, தென்னை வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுதல் தொடர்கின்றமை -

✪ பொதுமக்களின் மீள்குடியேற்றம் தடுக்கப்படுவதுடன், புதிதாகவும் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்படுகின்றமை -

இவ்வாறான செயற்பாடுகள் எமது மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதைப் பாதிப்பதோடு அவர்களின் பொருதாரமும் மிகமோசமாக பின்தள்ளப்படுகின்றது. அத்துடன் இவை சமாதானம் நோக்கிய பாதையில் தடைகற்களாகவும் அமைகின்றன. இத்தடைகளை அகற்றி சமாதான முயற்சிகளுக்கு வலுச்சேர்க்குமுகமாகவும் அரசின் அசமந்தப் போக்கை கண்டிக்குமுகமாகவும் எமது ஒன்றிணைந்த எதிர்ப்பைத் தெரிவித்து எதிர்வரும் 12-06-2002 புதன்கிழமை அன்று குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

அன்றைய தினம் மருத்துவ சேவைகள் தவிர்ந்த அனைத்து அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபணங்கள், தனியார் துறையினர், வர்த்தக நிலையங்கள் (சந்தைகள் உட்பட), பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், போக்குவரத்து சேவைகள் (A-9 போக்குவரத்து உட்பட) அடங்கலாக அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்தி எமது முழுமையான எதிர்ப்பை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)



ஜப்பானின் ஜுன்ஜி இனாமோட்டோவிடமிருந்து பந்தைப் பறிக்க முயலும் ரஷ்ய வீரர் திமிர்த்தி கொக்லோவ்.

# ஜப்பான் அணிக்கு வரலாற்று வெற்றி!

சியோல்,ஜுன10

நேற்று நடந்த உலகக் கிண்ணத்துக்கான ஆட்டங்களில் ஜப்பான் மற்றும் மெக்ஸிக்கோ அணிகள் வெற்றிபெற்றன. கொஸ்ராரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையிலான ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. உலகக் கிண்ணப் போட்டிகளில் ஜப்பான் அணி பெற்ற வரலாற்று வெற்றி இது எனப் புகழப்படுகின்றது.

முதலாவது ஆட்டம் மெக்ஸிக்கோவுக்கும் ஈக்குவடோருக்கும் இடையில் நடந்தது. 2-1 என்ற கோல் அடிபபடையில் மெக்ஸிக்கோ அணி வென்றது. ஆட்டம் ஆரம்பித்த 5ஆவது நிமிடத்தில் ஈகுவடோர் அணி வீரர் ஒஸ்டின் டில்காடோ அபாரமாக ஆடி தன் அணிக்காக ஒரு கோலை அடித்தார். பதிலுக்கு 27ஆவது நிமிடத்தில் ஜார்ஜ் போர்கெட்டி ஒரு கோலை அடித்து ஆட்டத்தைச் சமப்படுத்தினார். இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவுற்றது.

பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த 12ஆவது -ஆட்டத்தின் 57ஆவது - நிமிடத்தில் மெக்ஸிக்கோ அணிவீரர் கெராடோ டொராடோ ஒரு கோலை அடித்தார். மெக்ஸிக்கோ ஒரு கோல் வித்தியாசத்தில் முன்நிலை வகித்தது. இறுதியில் 2-1 என்ற அடிப்படையில் மெக்ஸிக்கோ வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டம் கொஸ்ராரிக்கா அணிக்கும் துருக்கி அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டன. ஆட்டத்தின் முன் பாதியில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. 55ஆவது நிமிடத்தில் துருக்கி அணி வீரர் எமர் பிலோசொக்லு முதலாவது கோலை அடித்தார். ஆட்டத்தின் 86ஆவது நிமிடத்தில் துருக்கியின் பின்கள வீரர்களின் அசண்டையீனத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திய கொஸ்ராரிக்காவின் துணை ஆட்டக்காரர் (Substitute) வின்ஸ்ரன் பார்க் துருக்கி அணியின் வியூகத்தை ஊடறுத்து நுழைந்து அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒருகோலை அடித்து தனது அணியை தோல்வியின் விளிம்பிலிருந்து காப்பாற்றினார். இறுதியில் 1-1 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம சமநிலையில் முடிவுற்றது.

மூன்றாவது ஆட்டம், போட்டிகளை நடத்தும் நாடுகளில் ஒன்றான ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் விறு விறுப்பாக நடைபெற்றது. 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜப்பான் வரலாற்று ரீதியான வெற்றியைப் பெற்றது. ஜப்பானின் ஜுன்ஜி இனா மோட்டோ அணிக்காக ஒரு கோலை அடித்து இந்த வரலாற்று வெற்றியைப் பெற உதவினார். முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் உக்கிரமாக மோதின. எனினும் எந்த ஒரு அணியும் கோல் அடிக்கவில்லை. இரு அணிகளுக்கும் கோல் அடிப்பதற்கான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவை சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

பின் பாதி ஆட்டம் ஆரம்பமான 5நிமிடங்களில் -ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் - ஜப்பானின் ஜுன்ஜி இனாமோட்டோ திடீரென ஒரு கோலை அடித்து ரஷ்ய அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். அடுத்த 6ஆவது நிமிடத்தில் ரஷ்ய அணிக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம் ஒன்றை அந்த அணி வீரர் பிஷச் அஸ்ரெனிக்கா தவறவிட்டார். மீண்டும் 70 ஆவது நிமிடத்தில் ஜப்பானிய வீரர் நஹாட்டா அடித்த பந்து ரஷ்ய கோல் கம்பத்தில் பட்டுத் தெறித்ததால் ஜப்பான் மேலும் ஒரு கோல் பெறுவது தடுக்கப்பட்டது. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜப்பான் அணி வெற்றிபெற்றது.

(ம)

### இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜுன்1

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம் (உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

- கொரியா எதிர் அமெரிக்கா (கொரியா - பகல் 12.30)
- ருனிஷீயா எதிர் பெல்ஜியம் (ஜப்பான் - பகல் 3.00)
- போர்த்துக்கல் எதிர் பொலண்ட (கொரியா - மாலை 5.30) (ம)



துருக்கியின் ஹசன் சாவும் குரோஷியாவின் கில்பேர்டோ மாட்டின்ஸும் பந்துக்கான பலபரீட்சை.

# தந்தை சிவசிதம்பரத்துக்கு பிரியாவிடை





மூத்த அரசியல் தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் அமைச்சர்களான கரு ஜய சூரிய, ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.யோகராஜன், வத்தேகம சம்மிக்க சமித தேரர், ஜோசப் பரராஜசிங்கம், ஆர்.சம்பந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், ராஜா கொலுரே, சிவசக்தி ஆனந்தன் மற்றும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மக்கள் கட்சி பிரமுகர் சமால் ராஜபக்ஷ, பேராயர் எஸ்.ஜெப நேசன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்



தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் புகழுடலுக்கு அமைச்சர்களான கரு ஜயசூரிய, ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகின்றனர். நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களையும் படங்களில் காணலாம்.





நீண்ட அரசியல் பயணம் முடிந்தது..... சோனப்பு மயானத்தை நோக்கி இறுதிப்பயணம். தந்தை சிவசிதம்பரத்தின் உடல் தீயுடன் சங்கமிக்கிறது.
(படங்கள்: தேவராஜன்)

### போர்ப் பதற்றத்தை தணிக்கும் நோக்குடன்

## அமெரிக்க அதிபர் புஷ் விரைவில் இந்தியா, பாகிஸ்தானுக்கு விஜயம்

புதுடில்லி,ஜூன்10

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர்ப்பதற்றத்தைத் தணிப்பதற்கான சமரசத் திட்டத்துடன் விரையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ.புஷ் இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எல்லையில் நீண்ட நாள்களாகத் தொடர்ந்து வரும் பதற்றத்தைத் தணிப்பதற்கு இந்தியா - பாகிஸ்தான் இரு நாடுகளும் எந்தவிதமான முயறசிகளையும் எடுக்கவில்லை. ஆனால, இந்த இரு நாடுகளிடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கு மேற்குலக நாடுகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றன. அமெரிக்கா இந்த விடயத்தில் மிக அதிகமாக அக்கறை காட்டி வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக இரு நாடுகளிடையேயான பதற்றத்தைத் தணிக்கும் ஒரு சமரசத் திட்டத்துடன் அதிபர் புஷ் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த வார ஆரம்பத்தில் இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளதாக பாகிஸ்தான் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ரிச்சர்ட் அர்மிடேஜ் இந்த விடயம் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்திருந்தார்.

இதன் அடுத்த கட்டமாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் இந்த வார இறுதியில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யவுள்ளார். அவரது விஜயத்தின் பின்னர் அதிபர் புஷ்ஷின் விஜயத்துக்கான திகதி அறிவிக்கப்படும் எனவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஆனால், புஷ்ஷின் விஜயம் குறித்து தமக்கு எந்தவிதத் தகவலும் இல்லை என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## லூயிஸ் வெற்றி

லண்டன்,ஜூன்10

உலக அதிபாரக குத்துச்சண்டை சம்பியன் பட்டத்தை லெனொக்ஸ் லூயிஸ் மற்றொரு முறை வென்று சாதனை படைத்துள்ளார்.

இதற்கான போட்டி நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதில் லூயிஸை எதிர்த்து சர்சைக்குரிய வீரரான மைக் டைஸன் மோதினார்.

இருவரிடையேயுமான மோதல் எந்தவித ஒழுங்கீனங்களும் இன்றி இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரியாதை செய்து பேசாததால் ஜப்பானில் ஒருவர் குத்திக் கொலை!

டோக்கியோ,ஜூன்10

ஜப்பான் நாட்டில் ஒருவரை ஒருவர் பெயர் சொல்லி அழைக்கும் போது 'சான்' என்ற வார்த்தையை பெயருக்குப் பின்னாள் சேர்த்துக்கூறி மரியாதை செய்வது வழக்கம். இப்படி மரியாதை செய்யாத ஒருவர் குடையால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

டோக்கியோ நகரில் இருந்து 269 கிலோ மீற்றர் மேற்கே உள்ளது சகுராகி என்னும் சிறு நகரம் இந்த நகரைச் சேர்ந்தவர்கள் ஜி சக மோட்டோ, தககி நிமி ஆகியோர்.

சம்பவத்தன்று இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது நிமி, சக மோட்டோவை பெயரை மட்டுமே கூறி பேசியுள்ளார். அவரது பெயருக்குப் பின்னால் 'சான்' அடைமொழியைச் சேர்க்கவில்லையாம். இதனால் ஆத்திரமடைந்த சகமோட்டோ தனது கையில் இருந்த குடையால் நிமியை முகத்தில் தாக்கியதுடன் அவரைக் குத்தவும செய்தார். இதில் படுகாயமடைந்த நிமி, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்து போனார். நிமியைக் கொலை செய்த தகவலை சகமோட்டோ தானாகவே பொலீஸுக்கு தெரிவித்து சரணடைந்தார்.

மரியாதை செய்து பேசாததால் ஜப்பானில் கடந்த மாதம்தான் இதே போல் ஒருவர் குடையால் குத்திக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பணயக் கைதிகளை மீட்டது பிலிப்பைன்ஸ் படை

மணிலா,ஜூன்10

பிலிப்பைன்ஸில் அபுசாயப் தீவிரவாதிகள் கடந்த ஒருவருட காலமாக பணயக் கைதிகளாக வைத்திருந்திருந்தவர்களை பிலிப்பைன்ஸ் இராணுவம் திடீர்த் தாக்குதல் நடத்தி மீட்டது. ஆயினும் அமெரிக்கர் ஒருவர் உட்பட இரு பணயக் கைதிகள் மீட்பு நடவடிக்கையின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

தலைநகர் மணிலாவிலிருந்து 750 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சிரவை என்ற காட்டுப்புறக் கிராமத்தில் இருந்த தீவிரவாதிகளின் நிலையே தாக்குதலுக்குள்ளானது.

இந்த நடவடிக்கையின்போது அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவ மதபோதகர் மார்டின் பர்ன்ஹாம் (வயது 42) மற்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பெண் மருத்துவதாதி எடி பரோயாப் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். மார்டினின் மனைவி கிரேசியா(வயது43) காலில் காயமடைந்தார்.

மற்றைய பணயக் கைதிகள் காயமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். ஆனால், எத்தனைபேர் மீட்கப்பட்டனர் என்ற விவரங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

பிலிப்பைன்ஸில் தற்போது நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படையினரின் வழிகாட்டுதலுடனேயே பிலிப்பைன்ஸ் இராணுவம் மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## அமெரிக்கத் தளம் அருகே நச்சு வாயு கண்டுபிடிப்பு!

### உஸ்பெகிஸ்தானில் சம்பவம்

மொஸ்கோ,ஜூன்10

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உஸ்பெகிஸ்தானில் உளள அமெரிக்கத் தளத்தின் அருகில் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய வாயுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து தளத்தின் ஒரு பகுதியிலிருந்த அமெரிக்கப் படையினர் அனைவரும் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஹர்ஷி ஹனாபாஸ் தளத்தின் அருகிலேயே இந்த நச்சு வாயுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த நச்சுவாயுக்களால் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தீவிரவாதிகளின் வேலையாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. முன்னாள் சோவியத்தின் இரசாயன ஆயுதங்களின் எச்சத்தில் இருந்து வெளிக்கிளம்பிய வாயுவாக இருக்கலாம் என்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

ஜப்பான் - தென்கொரியா


# உலகக் கிண்ண கால்பந்து



2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002

ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ரசிகர்களின் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துக்கு அளவே இல்லை. அவற்றில் சில காட்சிகள்..., முதலாவது படம் ஒரு விளம்பரம்.






















கடந்த இரு தினங்களாக

## யாழ்.பல்கலை வளாகத்துக்குள் மாணவர் அனுமதிக்கப்படவில்லை

### மோதல் சம்பவம் காரணமாம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாணவர் குழுக்களிடையே நடந்த மோதலைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தினுள் செல்ல மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி மாலை மாணவர் குழு ஒன்றினால் யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதி மற்றும் விஞ்ஞான பீட மாணவர் பொது அறை முதலானவை சேதமாக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன.

இந்த நிலையில், யாழ். பல்கலைக்கழகத்தினுள் நேற்றும், நேற்று முன்தினமும் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அத்துடன் மாலை 6.00 மணியுடன் பல்கலைக்க்ழக முன்வாயில் கதவுகள் பூட்டப்பட்டன.

மோதல் சம்பவம் தொடர்பான விசாரணை மற்றும் சோதனைகளை மேற்கொள்ள வசதியாகவே பல்கலைக்கழக நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவரிடையேயான மோதல் சம்பவம் குறித்த விசாரணைகள் இன்று பல்கலைக்கழக நிர்வாகத்தால் மேற்கொள்ளவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-12-ரி)

## பல்கலையில் நடக்கவிருந்த நிகழ்ச்சி இடம்மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்10

நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதாகவிருந்த 'சிந்தனைச்செல்வர் பொ.கைலாசபதி ஆளுமையும் ஆக்கமும்' என்ற நூலின் வெளியீட்டுவிழா குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்தமடத்தில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் பாதுகாப்பு அலுவலர்களைத் தவிர பிறர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாலேயே, மேற்படி நிகழ்ச்சி நடக்கும் இடம் மாற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்று வரும் புறநிலைக் கற்கைநெறிகளுக்கான வகுப்புகளும், கடந்த இரு தினங்களாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-12-ரி)

## வீடுகளுக்கு இணைப்பு வழங்க 'ரெலிகொம்' துரித நடவடிக்கை

யாழ்பாணத்தில் வீடுகளுக்கும் தொலைபேசி இணைப்புகளை வழங்க ரெலிகொம் நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுவரைகாலமும் தொழில்முறைத் தேவைகளுக்கே பெரும்பாலான தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுவந்தன. இந்த நிலையில் தனிப்பட்ட வீட்டுப் பாவனைக்கு தொலைபேசி இணைப்புகளை வழங்குவது தொடர்பாக தலைமையகத்துடன் கலந்தாலோசிக்க அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-12)

## மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இன்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்10

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நால்வர் இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஹொட்ஸ்றே குணதிலக மற்றும் உறுப்பினர்களான திருமதி மனோஹரி முத்தெட்டுவேகம, ஆர்.சி.கருணாகரன், சரத் குரே ஆகிய நால்வருமே இங்கு வரும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 13ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் இவர்கள், யாழ்.மாவட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவினருடனும் மற்றும் பொதுமக்களுடனும் அவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

காணாமற்போனோர் சங்கத்தின் அங்கத்தவர்களை இதே தினத்தில் காலை 8 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

குடாநாட்டில் தற்போது மனித உரிமைகள் எந்தளவுக்குப் பேணப்பட்டு வருகின்றன என்பது தொடர்பாகவே இந்தக் குழுவினர் ஆராயவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

## யாழ். –கொழும்புத்துறை பஸ்சேவை ஆரம்பிக்க மக்கள் கோரிக்கை

குருநகர்,ஜூன்10

யாழ்.நகரிலிருந்து கொழும்புத்துறை மார்க்கத்தில் பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்படாததனால் பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கடற்கரை வீதியூடாக முன்னர் நடைபெற்று வந்த யாழ். - கொழும்புத்துறை பஸ் சேவையை ஆரம்பித்து நடத்துமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் இப்பகுதி மக்கள் கோரிவருகின்றபோதும் காவலரண்களும் தடையாக உள்ளன. இதனால் இச்சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

பாஷையூர் பகுதியில் கடற்கரை வீதியைத் தவிர்த்து ஏனைய இடங்களில் சுமார் 500இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளவும் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். இப்போக்குவரத்து இல்லாததனால் பாஷையூரிலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ள யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதிக்கும், யாழ்.வைத்தியசாலைக்கும் இம்மக்கள் கால்நடையாக அல்லது தனியார் வாகனங்களில் அல்லது சைக்கிளிலேயே செல்லவேண்டியுள்ளது. இதனால் நோயாளிகளும், வயோதிபர்களும் வந்து செல்வது மிகவும் கஷ்டமாக உள்ளதாக இம்மக்கள் கூறுகின்றனர்.

தற்போது யாழ். - கச்சேரி பஸ் போக்குவரத்து நடைபெற்றுவருவதனால் அச்சேவையை பாஷையூர்வரை நீடித்தால் இம்மக்களின் போக்குவரத்து கஷ்டத்தை நீக்கக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. (ஒ-51)

# உதயன்

## நிதானமான அணுகுமுறை தேவை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பான விடயம் சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

நேரடிப் பேச்சுக்கான நல்லெண்ண சூழலை உருவாக்குவதற்காக நிறைவேற்ற வேண்டிய விடயங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செவ்வனே நிறைவேற்றுவது என்று இணங்கியே இருதரப்புகளும் உடன்படிக்கையை ஏற்றுக்கொண் டன.

அதன்படி உடன்படிக்கை அமுலுக்கு வந்து தொண்ணூறு தினங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டி பலவற்றை அரசுத் தரப்பு நிறைவேற்றி நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது.

இது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விதமான கொந்தளிப்பு நிலையை உருவாக்கி இருக்கிறது. வடக்கு - கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபடுவது தொடர் பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட ஷரத்துக்களை மதிக்காமல் அரசு புதிய விதிகளைப் பிரகடனம் செய்து மீனவர்களை சுதந்திரமாகத் தொழில் செய்யவிடாது கட்டுப்படுத்தியிருக்கிறது.

மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தொடர்பாக அரசு வெளியிட்ட வர்த்தமானிப் பிரகடனம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விதிகளை மீறுவதாக உள்ளது என்று வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் ஒருவர் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக மொத்தத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிகளை அரசும் படைகளும் அப்பட்டமாக மீறி நடப்பது தெளிவாகி இருக்கிறது. இதனால் தமிழ் மக்கள் அதிருப்தியுற்று இருப்பது நியாயமானதே. ஆனால், மக்கள் தங்கள் அதிருப்தியை - அரசுக்கு எதிரான ஆட்சேபத்தை - வெளிப்படுத்தும் போது சமாதான சூழ்நிலைக்கு குந்தகமான அசம்பாவிதங்கள் ஏற்பட்டுவிட அனுமதிக்கக்கூடாது. இதுபற்றி மிகுந்த விழிப்புணர்வு அவசியமானது.

மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் சமாதானம் மீதான அவாவை வெளிப்படுத்துவனவாக இருக்க வேண்டுமே தவிர உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வளர்ந்துவரும் நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை மழுங்கடிக்கச் செய்யும் சம்பவங்களுக்கு அடிகோலி விடுவனவாக அமைந்துவிடக்கூடாது.

யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற மாணவர் எழுச்சி நிகழ்வுகளை வீடியோப் படம் எடுத்த பொலீஸாருடன் மாணவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். பின்னர் அந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தலையிட்டு மாணவர்களைக் கட்டுப்படுத்தியதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.

படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலையை உருவாக்கி, சமாதான முயற்சிகளைக் கவிழ்த்துக் கொட்டிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் 'சக்திகள்' குறித்து மக்களும் மாணவர்களும் விழிப்பாய் இருப்பது அவசியம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்தாமல் அரசு காலம் தாழ்த்தி வருவதை ஆட்சேபித்து இவ்வாரம் குடாநாட்டில் வெகுஜன எழுச்சிப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்தப் போராட்டங்கள் மிகவும் அமைதியான முறையில் - கட்டுக்கோப்புடன் முன்னெடுக்கப்படுவதை அதன் ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்துகொள்ளவேண்டும்.

தலைமுறை தலைமுறையாகத் தொடரக்கூடிய பேரழிவுகளை ஏற்படுத்திவிட்டு ஓய்ந்துள்ள யுத்தம் மீண்டும் இந்த மண்ணில் மூண்டுவிடக் கூடாது என்பதில் தமிழர் தலைமையும் அரசுத் தலைமையும் மிகத் தெளிவான நிலைப்பாட்டை எடுத்ததன் மூலமே நாட்டில் தற்போதைய சமாதானச் சூழல் உருவாக முடிந்தது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்புகளுமே தமது நம்பிக்கைக்குரிய அனுசரணை யாளராக நோர்வேயை ஏற்றுக்கொண்டுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பு களும் செம்மையாக நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் தொய்வு நிலையை அகற்றவும் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாக எழுந்துள்ள முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கும் நோர்வே சமாதானக் குழு தீவிரமாக முயன்று வருகிறது.

சமாதானத்துக்கு சந்தர்ப்பம் அளிக்க இரு தரப்புகளும் விட்டுக்கொடுப்புகளையும், பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களையும் மேற்கொண்டு வரு கின்றன.

இந்தக் கட்டத்தில் போர்நிறுத்த உடன்படிக்கையை ஒருதரப்பு மீறிவிட்டதாக கண்காணிப்புக் குழு முடிவு செய்து அதனை நோர்வே தரப்பு ஊடாக முறைப்படி அறிவித்தால் அன்றி சமாதான முயற்சிகள் குழம்பிப் போய்விட்டன என்ற முடிவுக்கு அவசரப்பட்டு எவரும் வந்துவிடக்கூடாது.

தலைமைகள் மட்டுமன்றி மக்களும் நிதானமாக இருக்கவேண்டிய தருணம் இது.

### உரிய விடுமுறை அனுமதி பெறாது

# தேர்தலில் போட்டியிடத் தயாரான அரச ஊழியர் மீது நடவடிக்கை!

வலி.வடக்கு,ஜுன்10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போடடியிடும் நோக்கத்துடன் தேர்தல் மனுப்பத்திரத்தில் கையொப்பமிட்ட அரச உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையெடுக்கப்படவுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரச உத்தியோகத்தர்கள் தேர்தலுக்கு மனுத்தாக்கல் செய்வதற்கு முன்னர் விடுமுறைக்கு விண்ணப்பித்து உரிய அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும் என்பது விதியாகும்.

ஆனால், கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த, பின்னர் ஒத்திவைக்கப்பட்ட வடக்குக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பல அரச உத்தியோகத்தர்கள் போட்டியிட மனுச் செய்திருந்த போதிலும் அவர்கள் விடுமுறைக்கு விண்ணப்பிக்கவில்லையென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அரச உத்தியோகத்தர்களாக இருந்துகொண்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்காது மனுத்தாக்கல் செய்தவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையெடுககும்படி சுற்றுநிருபம் அனுப்பியுள்ளார். வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பின்னர் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தேர்தல மனுவில் விடுமுறை அனுமதி பெறாது கையொப்பமிட்டமைக்காக யாழ். மாநகரசபையைச் சேர்ந்த ஐந்து ஊழியர்களுக்கு மனு அறிவித்தல் வரை கடமைக்கு சமுகமளிக்க வேண்டாமென ஆணையாளரினால் கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறபபடுகிறது. (ஒ-86)

### குப்பைக் கிடங்காக மாறிவரும்

## மாநகரசபை வளாகம் மற்றும் சுப்பிரமணியம் பூங்கா சீராகுமா?

### பொதுமக்கள் எதிர்பார்ப்பு

குருநகர்,ஜுன்10

ஒரு காலத்தில் யாழ்பாணத்தின் பிரபலமான நிலைக்குறியீடுகளாகத் திகழ்ந்த யாழ்.மாநகரசபையின் சொந்தக் கட்டடம், சுப்பிரமணியம் பூங்கா ஆகியன யுத்த அனர்த்தத்தால் அடியோடு அழிந்துவிட்ட நிலையில் தற்போது அப்பகுதிகள் குப்பை கொட்டும் இடங்களாக மாறிவருகின்றன. இதனால் அவை அமைந்துள்ள பிரதான வீதி வழியாகச் செல்வோர் துர்நாற்றத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இறந்த மிருகங்களின் எச்சங்கள், தோல்கள் உட்பட பெருமளவிலான கழிவுப் பொருள்கள் இப்பகுதியில் கொட்டப்படுவதாலேயே துர்நாற்றம் வீசும் நிலை உருவாகியிருப்பதாகவும் -

இங்கு கொட்டப்படும் கழிவுகளை பறவைகள் எடுத்துச் சென்று அருகே உள்ள வீடுகள், துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் பாடசாலைகளில் போடுவதால் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

பொன்விழாக் கொண்டாடிய யாழ்.மாநகரசபை தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலாவது சொந்தக் கட்டத்தைக் கட்டவும், சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-51-ரி)

## வலி.மேற்குப் பிரதேசத்தில் பத்து வேலைத்திட்டங்கள்

வலி.மேற்கு ஜுன்10

வலிகாம்ம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தால் சுமார் 32 லட்சம் ரூபா செலவில் 10 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு நலன் பயக்கும் வகையில் பெரும்பாலன திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

சுழிபுரம், காட்டுப்புலம் முகாமுக்கு 2 லட்சத்து 30ஆயிரம் ரூபா செலவில் அரை நிரந்தர பல நோக்கு மண்டபம் கட்டப்பட்டது. குடிதண்ணீர் வசதிக்கு 34ஆயிரம் ரூபாவும், சுயதொழில் வேலை வாய்ப்புக்கு 2லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டது. வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 87 அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு சுமார் 21லட்சம் ரூபாவும், சங்கானையிலுள்ள அகதி முகாம்களில் உள்ள குடும்பங்களுக்கு சுழற்சி முறைக்கடன் வழங்குவதற்கு 2லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் -

அராலி வடக்கில் சலவைத் தொழிலுக்கான தொட்டிகளுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், முங்கோடை, நல்லதம்பி கடை, ஒடுகம்புலம், ஓடக்கரை ஆகிய இடங்களில் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு சுமார் ஒரு லட்சம் ரூபாவும் நலன்புரி நிலையங்களில் மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு சுமார் 70ஆயிரம் ரூபாவும், மூளாய் ஒடுகம்புலத்தில் மலசலகூடம் அமைத்துக் கொடுப்பதற்கு 25 ஆயிரம் ரூபாவும் -

நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற இளைஞர்களுக்கு வியாபார முகாமைத்துவப் பயிற்சி ஒன்றை வழங்கியதற்கு சுமார் 25ஆயிரம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் யாவும் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினரின் மேற்பார்வையின் கீழ் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

### நாளை

வைகாசி 28

செவ்வாய்க்கிழமை

(11.06.2002)

திதி : பிரதமை

வைகறை 5.26 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பின்னிரவு 1.23 வரை.

சுபநேரம் : 10.22 - 11.52

ராகுகாலம்: 2.52 - 4.22

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சமமான தூண்களிலேயே கோபுரம் எழுப்பமுடியும். அது போலத்தான் இல்லறமும்.

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் சூறையாடல் அதிகரிப்பு!

தென்மராட்சி,ஜுன்10

இதுவரை காலமும் தென்மராட்சிப் பகுதியில் தமது கைவரிசையைக் காட்டிவந்த திருடர்கள், அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதையடுத்து, தற்போது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள வீடுகளை இந்தத் திருடர்கள் சூறையாடத் தொடங்கியுள்ளனர்.

அப்பகுதி மக்கள் இடம்பெய்ந்துள்ள நிலையில், அங்குள்ள வீடுகளின் இரும்பு கேற்கள், ஓடுகள், நிலைகள் என எல்லாவற்றையும் வாகனங்கள்மூலம் திருடர்கள் கடத்திச் செல்வதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமர்வதற்காகத் தமது வீடுகளைத் திருத்தி வருவதாகவும் -

ஆகவே, பச்சிலைப்பள்ளியில் இருந்து சூறையாடும் பொருள்களை சமூகவிரோதிகள் சுலபமாக விற்கக்கூடியதாக உள்ளதாகவும் -

கூறப்படுகிறது. (ஒ-117)

## கிளிநொச்சியில் 16ஆம் திகதி இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜுன்10

கிளிநொச்சியில் உள்ள மக்களின் நலன் கருதி யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவக் குழு ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி அங்கு இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்த உள்ளதாக யாழ்.மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி செல்லும் மருத்துவக் குழுவில் சத்திர சிகிச்சை, பெண் நோயியல், கண் மருத்துவம், பொது வைத்தியம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள் ஆகியோர் அடங்குவர் என்றும் -

கிளிநொச்சியில் இடம்பெறும் மருத்துவ முகாமில் மருந்துகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்ற மருத்துவ முகாம்களை மாதாமாதம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-139)

## மருதங்கேணி வீதிகளை திருத்துமாறு கோரிக்கை

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் போக்குவரத்து மேற்கொள்ளமுடியாத நிலையில் மிகமோசமாகக் காணப்படுகின்றன. சைக்கிள்களில் செல்வோர்கூட இறங்கி உருட்டிச்செல்லவேண்டியுள்ளது.

இப்பகுதியில் மீளக்குடியமர மக்கள் ஆர்வம் காட்டிவருவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பிரதேசத்தில் நீண்டகாலமாக செப்பனிடப்படாத வீதிகளை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (ஒ-182)



யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவுக்கு திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம். (ஒ-10)

### நயினை நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற தின சிறப்பம்சம்

#### கொடியினில் ஏறி அருளிடும் தாயே!

அலைகடல் தாண்டி அடியவ ரெல்லாம்
அம்பிகை யுந்தன் அருளினை நாடி
கலைபொலி நயினைப் பதியினைத் தேடி
கருணைசெய் தாயின் கழலடி போற்ற
நிலைபெறு தாயின் நிழலதை வேண்டி
நேர்த்திகள் வைத்தே நிம்மதி காண
கொலை பயம் நீங்கி குவலயமுய்ய
கொடியினி லேறி அருளிடு தாயே!

- நயினை இராகுலன்.

எதிர்பார்த்த பயனைத் தராததால்

# இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தம் விரைவில் மீள்பரிசீலனைக்குள்ளாகும்

## அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்10

இந்தியாவுக்கும்- இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கை எதிர்பார்த்த பயனைத் தராததால அது மீள்பரிசீலனைக்குட்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் அங்கு முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவும் இலங்கையும் மிகவும் பயன்தரும் எனக் கருதிச் செய்து கொண்டுள்ள வர்த்தக உடன்படிக்கை எதுவித பயனையும் அளிக்கவில்லை. அத்துடன் இந்த ஒப்பந்தத்தால் மிகவும் நெருக்கடியான நிலையும் உருவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் வர்த்தக நடவடிக்கையை மேம்படுத்துவதில் இருந்து தவறிவிட்டது.

ஆடைவகைகள், ஏனைய பொருள்களை ஏற்றுமதிசெய்யும்போது துறைமுகத்தில் ஏற்படும் பிரச்சினைகள், சுங்க நடவடிக்கைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள், சட்டதிட்டங்கள் என்பன இரு நாட்டு வர்த்தகத்தில் சிக்கல்களை உருவாக்கியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இரு நாட்டு ஏற்றுமதியாளர்களும் இணைந்து சரியான நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஓ-12-4)

### கத்திக்குத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜுன்10

இருபாலைப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற தகராறில் படுகாயம் அடைந்த மூவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட நாள்களாக இருந்துவந்த பிணக்கு முற்றியதில் ஆரம்பித்து கத்திவெட்டு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இருபாலை பழம் றோட்டில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர், விவரம் வருமாறு:

இருபாலை பழம் றோட்டைச் சேர்ந்த கே.யோகரத்தினம் (வயது 48), அதே இடத்தைச் சேர்ந்தவர்களான ஆர்.கனகராசா (வயது 40), எஸ்.செல்வம் (42) ஆகிய மூவருமே கத்திக்குத்துக்கு இலக்கானவர்களாவர். (ம-றி)

### வேலையற்றோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஜுன்10

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் தொழில் நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் பணியை யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி கேணல் எம்.விரத்னாயக்க மேற்கொண்டுள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள், ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தோர் தமது சுயவிவரங்களை தமக்கு அனுப்பும்படி அவர் கேட்டுள்ளார். (ம-3)

### புலிகளின் பகுதிக்கு தொலைபேசி இணைப்புகள்

கொழும்பு,ஜுன்10

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்கு, சம்பூர் கிராமத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, அப்பகுதிக்கு 2 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தசாப்த காலத்தின் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்க முதல் தடவையாக பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக ரெலிகொம் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-6)

### மெய்வன்மைப் போட்டி

தாவடி,ஜுன்10

உடுவில் அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் சி.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் முன்னாள் கிராம உத்தியோகத்தர் எஸ்.ஆர். யேசுபாலன் பிரதமவிருந்தினராகவும், மல்லத்தை றோ.க.த. பாடசாலை அதிபர் சி.பஞ்சாட்சரம் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-றி)

### அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி பெற்றோருக்கு!

யாழ்ப்பாணம்,ஜுன்10

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி நெறியில் பங்கேற்ற அபிவிருத்திப் பரிசோதகர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கு எதிர்கால வேலைவாய்ப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிப்பதற்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஆரிய குளத்திற்கு அருகிலுள்ள புதிய உயர்கல்வி நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஓ)


**10% தொடக்கம் 40% வரை கழிவு விலையில் விற்பனையாகின்றன**

மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், பட்டப்படிப்புக்கான வைத்தியம், பொறியியல், வர்த்தகம், கணனி, மின்னியல் பாடத்துக்கான நூல்கள், ஆங்கில - தமிழ் நாவல்கள், சிறுவர்களுக்கான சகலவிதமான புத்தகங்கள், வாழ்த்துமடல்கள் யாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்:

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**

இல.212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C/22435)




## பிரதிஷ்டா கும்பாபிஷேகம் வருடாந்த சங்காபிஷேகம் மணவாளக்கோலம்

கைதடி, கயற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் கோயில் அமைத்து பிரதிஷ்டை செய்துவைக்கவென முருக பக்தர் ஒருவரால் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சிலைகள்:

ஸ்ரீ நடராஜரும் சிவகாமியும்
ஸ்ரீ துர்க்கை அம்மன்
ஸ்ரீ சரஸ்வதி
ஸ்ரீ லக்ஸ்மி

ஆகிய விக்கிரகங்களை வைகாசி 30ஆம் நாள், 13.06.2002 வியாழக்கிழமை வரும் சுபமுகூர்த்தத்தில் பிரதிஷ்டா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. அன்றும், அதற்கு முதல்நாள் நடைபெறும் கிரியைகளிலும் பங்குபற்றி திருவருளைப் பெற்றுய்யுமாறு பக்தர்களை வேண்டிக்கொள்கிறோம்.

இக்கிரியைகள் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார ஜெகநாதக்குருக்கள் அவர்களால் நடத்தப்பெறும்.

அடியார்கள் தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், தூபதீபம், புஷ்பம் முதலியவற்றை அர்ப்பணித்து திருவருள் பெற்றுய்வீர்களாக.

கைதடி வடக்கு. (4576) பரிபாலனசபையினர்

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 01 - 1972 | 09 - 06 - 1994 |

**செல்வன் திருநாவுக்கரசு ரஞ்சன்**

(ஜேர்மனி)

எட்டு ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

125, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். (4691) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராமையா கமலம்**

திதி: 10.06.2002

ஆண்டு ஒன்று கழிந்தாலும்
நாம் உங்கள் மேல் வைத்த
பாசம் என்றென்றும் அழியாது!

164, இராமலிங்கம் வீதி,
முடமாவடி. (4667) உங்கள் பிரிவால் துயருறும்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 - 06 - 1925 | 11 - 05 - 2002 |

**அமரர் தம்பிப்பிள்ளை வைகுந்தர்**

(உரிமையாளர், கிருஷ்ணா சைக்கிள் வேக்ஸ், கைதடிச் சந்தி, கைதடி)

திதி: 10-06-2002

புகழோடு தோன்றி
நலமுடன் வாழ்ந்து
அளவுடன் சிறப்புகள் கண்டு
அமரத்துவம் எய்திய பெருந்தகை ஐயாவே!
உங்கள் நினைவு என்றும் எமது உள்ளத்தே உறங்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மாவடி முருகனை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

கைதடி மத்தி,
கைதடி. (4580) கிருஷ்ணா சைக்கிள் வேக்ஸ், கைதடிச் சந்தி, கைதடி.


**Canon NP. 1215**

போட்டோக் கொப்பி இயந்திரத்திற்குரிய

Equis Toner

விற்பனைக்கு உண்டு

**நியூ தாரங்கி**

109, பலாலி றோட்
திருநெல்வேலி.
T.P No 2132



**வைத்தியம்**

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**

121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459 (4668)


## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 02 - 1924 | 22 - 05 - 2001 |

**அமரர் சின்னத்தம்பி கந்தசாமி**

எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் பசி மறந்து எம்மை வளர்த்தெடுத்து
மாண்புடனே தரணியில் வாழ வைத்து
கார்த்திகை விரத நன்னாளில்
மயிலோன் பாதம் சென்ற துயரை
இன்றும், என்றும் ஆறாத்துயருடன் நினைவு கூர்ந்து...
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

க.தர்மகுலசிங்கம் (மகன்)
கைதடி மேற்கு, கைதடி. (4630) உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

# விடியலின் மௌனங்கள் சுமந்து வந்த துயரங்கள்

**1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மண்டைதீவில் அதிகாலைவேளை துயரத்துடன் விடிந்தது. அன்றைய தினம் 36 மீனவர்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் துயர முடிவின் பதினாறாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.**

கடல் அலைகளின் தாலாட்டில் நித்தமும் துயில்கொண்டு துயில் எழும் தீவுகளின் தலைத்தீவான மண்டைதீவில் கங்குல் கலையமுன்- கனத்த இருள் விலகுமுன் - விடியலின் மடியில் வேதனையின் சுவடுகள முதன்முறையாகக் கருக்கொள்ளத் தொடங்கின.

துயரம் தோய்ந்த அந்த நாளின் நினைவுகள், இன்றுகூட மண்டைதீவு மக்களின் விழியோரங்களை நனைக்கின்ற நாளாகவே விடிகின்றன.

குருநகர் மக்கள் அந்தப் படுகொலைகளின் அதிர்ச்சியில் இருந்து இன்னும் விடுபடவில்லை. குரூரமான மனம் படைத்தவர்களின் செயல் வடித்தெடுத்த வடுக்களின் ரணம் இன்னும் ஆறவில்லை. அந்த இழப்புக்கால் இடிந்துபோன உறவுகளும், சிதைந்து போன குடும்பங்களும் இன்றுவரை அந்தரித்துக்கொண்டே இருக்கின்றன.

அந்த நாள் ஜூன் பத்து, 1986ஆம் ஆண்டு சனிக்கிழமை. சின்னஞ்சிறுசுகளின் மனங்களிலும் இன்றும் நிலைத்து நிற்கும் துயரம் தோய்ந்த நினைவு நாளாகும்.

வாடையின் வருடலிலும் கோடையின் மோகரிப்பிலும் வளைந்து நெளிந்து கிடக்கும், மண்டைதீவின் கிழக்குக் கடற்கரை, குருநகர் மீனவர்களின் பச்சை ரத்தத்தால் உறைந்து போயிற்கு. அன்று தீவகத்தின் சிவந்த மண் சொந்த மண்ணின் மைந்தர்களின இரத்தச் சிதறலால் மேலும் சிவந்தது.

புனிதமான அந்த மண் அப்படியான ஒரு கொடூரமான படுகொலையை, ஈன இரக்கமற்ற கூட்டு படுகொலையை இதற்கு முன் என்றுமே கண்டிருக்கவில்லை. அது இரு கிராமங்களின் சோகக் கதை.

கும்பிட்ட பிஞ்சுக் கரங்களை துப்பாக்கிக் குண்டுகளால் சிதறடித்த ஐம்பத்தெட்டுக் கலவரத்தையும் இந்தச் சம்பவம் வெட்கித் தலைகுனிய வைத்தது. எண்பத்து மூன்றில் தென் பகுதிச் சிறைக்கூடங்களில் நடந்த அரசியல் கைதிகளின் படுகொலைகளின பாணியில் இது நடத்திமுடிக்கப்பட்டது.

சோர்விலா உழைப்பும், துணிச்சலும், வீரம் நிறைந்த தியாகமும் கொண்ட அற்புதமான ஒரு மகரத் தீவில் இப்பெரும்துன்பம் எப்படி நடந்தது?

"தள்ளா விளையுளும் தகைசான்ற சொற்காப்போரும்" வாழுமிடத்தில் இன அழிப்பு நடைபெற என்ன பழி வந்தது? என்று நொந்துபோன உள்ளங்கள் சிந்தித்ததும் உண்டு.

இந்தியாவின் ஜாலியன்வாலா பாக் படுகொலைகள், வியட்நாமின் காடுக் கிராமங்களைக் கூண்டோடு அழித்த கொலைகள், ஜேர்மனிய யூதர்களைப் பூண்டோடு ஒழித்த தடுப்பு முகாம்கள், சீனத்தின் மஞ்சூரியாவில் ஜப்பானியர்கள் அமைத்த வதைக்கூடங்கள் மூலம் அன்னியர் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளின் வரலாற்றுத் தொடரில் குருநகர் மீனவர்களின் படுகொலைகள் இடம்பிடித்துக் கொண்டன. வேலியே பயிரை மேய்ந்து; பாவம் புரிந்த வரலாற்றுத் துயரம் அது.

அதிகாலைவேளை மண்டைதீவு - பண்ணைச் சந்தியில் இருந்த பாதுகாப்பு 'அரண்களில் இருந்து கரிய உருவங்கள் மெல்ல நகரத் தொடங்கின. சிறிய பற்றைகள் ஊடாகவும், கரியபனைகள் ஊடாகவும், பின் வயல்வெளி, தோட்டவெளி, கடற்கரையோரமாகவும் நகர்வுகள் இடம்பெற்றன.

எதிரியின் இலக்கு எதுவென ஊகிக்க முடியவில்லை. எல்லாம் முடிந்த பின்பே, துறைமுகத்துக்கப்பால் தெற்கேயுள்ள கடற்கரைப் பகுதி எனப் புரிந்தது.

"அவங்கள் வாறாங்கள்..." என்ற செய்தி வேகமாகக் கசியத் தொடங்கியதும் பிஞ்சுகள், காய்கள், பழங்கள் எல்லாம் குலுங்கிக் குலைந்தன.

ஐந்துகள் பிஞ்சுகளைச் சுமந்தன. ஐம்பதுகள் எண்பதுகளை ஏந்தின. திக்குத் தெரியாத பயணங்கள். நடையா? ஓட்டமா? எதை எடுப்பது எதை விடுவது? எவருக்கும் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

தாலிகள்கூட வேலிக்குள் பதுங்கிக்கொண்ட மனித அவலங்கள் அன்று அரங்கேறின.

**கைலாசபிள்ளை பேரின்பநாயகம்**

திக்கற்றவர்களுக்குத் தெய்வம் தான் துணையாம். புனித சம்பேதுருவானவர் ஆலயம், திருவன் காட்டுச் சித்தி விநாயகர் ஆலயம் என்பன அவலப்பட்டவர்களுக்கு அடைக்கலமாயின.

அதே தினத்தில் அந்த இளம் காலைப் பொழுதில் தெற்கேயுள்ள தீவில் என்ன நடக்கிறதென தெரியாத வேளையில், குருநகர் முகத்துவாரத்தில் ஒரு வள்ளத்தின் வெள்ளோட்ட ஆயத்தங்கள் ஆரம்பமாகின. ஆமாம், பாடுபார்த்து மடிவலை சுமந்து பிடிதடம் தேடும்.. ஒரு வெள்ளோட்டம்.

வள்ளத்தில் எவரும் ஏறலாம். ஏறுபவரைத் தடுக்கக் கூடாது. அது சகுணப் பிழை. ஏறுபவர்களை எண்ணக் கூடாது. அதுவும் நல்ல சகுணம் அல்ல. யாரும் கணக்கெடுக்கப்படவுமில்லை, யாரும் தடுக்கப்படவுமில்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் இருவர், மூவர் என இடம்பிடித்துக் கொண்டனர். சின்னஞ் சிறுவர்கள், அண்ணன் தம்பி என அனைவரும வயது வேற்றுமை இன்றி ஏறிக் கொண்டனர். ஒவ்வொருவருக்கும் 'பிடிபாட்டில்' சம பங்கு கிடைக்கும்.

சம்மாட்டி பிலிப்பு, கணக்கெடுத்திருந்தால் 32 பங்கு பிரிக்கவேண்டுமென எண்ணியிருப்பார்.

விடியலின் நுகைப்பில் தெற்கு நோக்கிய வெள்ளோட்டம் ஆரம்பமாகியது. தீவகக் கரையை அடைந்ததும் 'மடி' விரிக்கப்பட்டு தொழில் ஆரம்பமாகிறது.

கடலின் தென்பகுதியில் இருந்து சில படகுகள் கரையை நோக்கி வருகின்றன. தூரத்தில் ஒரு கடற்கப்பல் வழமையான காட்சி. தொழில் மும்முரத்தில் எவரும் எதையும் கவனிக்கவில்லை. தூரத்தில் உலங்கு வானூர்தியின் சத்தம் தேய்ந்து மறைகிறது. படகுகள் நெருங்குகின்றன.

கடற்கரையின் பின்னனியில், நகர்ந்து வந்த கறுத்த உடை தரித்த துப்பாக்கிகள், வியூகம் அமைத்திருந்தன.

எவரும் தப்பவில்லை. என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியாது. ஒரு வெடி தீர்ந்த சத்தம் கூட அப்பொழுது கேட்கவில்லை. தூரத்துக் கோயிலில் இருந்தவர்களுக்கு எந்த மரண ஓலமும் கேட்கவில்லை.

செய்தி அறிந்த, சாட்டிக் கரையில் இருந்து வந்தவர்களின் வருகையால் மண்டைதீவுக் கடற்கரை வெறிச்சோடியது. வந்தவர்களின் எண்ணிக்கை 18 மட்டும்தான்.

தேடிப் பார்த்தபொழுது கோடாரி, கத்தி, கனத்த இரும்பு போன்ற ஆயுதங்களால் மண்டை பிளந்தும், சிதைக்கப்பட்டும், முகங்கள் விகாரப்படுத்தப்பட்டும், கோரமாகக் குதறி எறியப்பட்ட 31 சடலங்கள் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டன. இவர்களுள் இடைவழியில் பிடித்துவரப்பட்ட உள்ளூர்க் கிராமவாசியின் சடலமும் ஒன்று.

படகுக்குள் 16வயதுக்கும் குறைந்த இரு சிறுவர்கள் கோரமாகக் கொல்லப்பட்டுக் கிடந்தனர். இருவரும் உடன் பிறந்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

சடலங்கள் முப்பத்து மூன்றும் வள்ளங்களில், ஊரவர்களாலும் மற்றவர்களாலும் ஏற்றப்பட்டு குருநகர் இறங்குதுறைக்கு அனுப்பப்பட்டன. அனைத்து சடலங்களும் குருநகர் இளைஞர் மன்ற முன்றிலில் நிரையாக அடுக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு நடைபெற்ற பின் குருநகர் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டன.

கடற்கரையில் இருந்து மண்டைதீவின் செம்மண் தோட்டங்களூடாகத் திரும்பிய வேளை, சினைப்பர் தாக்குதலால் சிதறிப்போன இரு பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாமனும் மருமகனும் என அடையாளங்காணப்பட்டன.

குருநகர் இளைஞர் மன்ற முன்றிலில் இக்கோரக் கொலைகளின் ஞாபகச் சின்னமாக நிறுவப்பட்ட நினைவுத் தூபி தற்போது மேற்கு நோக்கி உடைந்து, வீழ்ந்துகிடக்கிறது.

ஆறு வருடங்களுக்கும் மேலாக அது அப்படியே படுத்திருக்கிறது. இந்த அவலத்தை நாங்கள் மறந்து விட்டோமா? இல்லை நெருங்கிய உறவினரிடமும், குடும்பத்தவர்களின் இதயங்களில் மட்டும் புதைந்து விட்டோமா?

நினைவுத் தூபியே நீதான் பதில் சொல்வாயா?

# நல்லன எல்லாம் தரும் நயினை நாகபூஷணி

**நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

பராசக்தி பல்வேறு வடிவங்களில் பார் முழுவதும் பரந்திருக்கிறாள். அவள் எல்லா வல்லமைகளும் தர வல்லவள். அவள் துணையாக இருப்பாள். தொழும் தெய்வமாக இருப்பாள், அவள் புவனம் பதினான்கையும் காப்பவளாகவும் இருக்கின்றாள்.

அத்தகைய அன்னை பராசக்தி தழைக்கும் சாந்தி ரூபமாக அபயம் தந்து, அலைகடல் நடுவே நயினை நாகபூஷணியாக எழுந்தருளியிருந்து, பாரும் புனலும், கனலும் வெங்காலும், படர்விசும்பும், விரிந்து பரந்து, விரும்பித் தொழும் அடியார்க்கு வேண்டிய வேண்டியாங்கு வழங்கிச் சகல உயிர்களுக்கும் தாயாய அருள் பாலிக்கின்றாள்.

நயினை நாகபூஷணி அம்மை எத்தனையோ அடியாருக்குப் பல அற்புதங்களைச் செய்திருக்கின்றதாக அறிகின்றோம். குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்குக் குழந்தைகளை அளித்தும், குணமாகாத நோய் உள்ளவர்களுக்கு அவற்றைக் குணமாக்கியும், வறுமையில் வாடியவர்களுக்குப் பெரும் வளங்களை வழங்கியும், ஊழ்வினையால் வந்த துன்பங்களைப் போக்கியும், நாயிற் கடையாய்க் கிடந்த அடியார்க்குத் தாயிற் சிறந்த தாயாக இருந்து அவ்வப்போது காப்பும் களிப்பும் வழங்கி இருப்பதை அடியார்கள் வாயிலாக அறிகின்றோம். இதற்குச் சான்றாக ஆலயத்திலே வைக்கப்பட்டிருக்கும் அடியார்களால் வழங்கப்பட்ட காணிக்கைப் பொருள்களைக் கூறலாம்.

**நாக.சண்முகநாதபிள்ளை**

அம்பிகைக்கு அணிசெய்யும் ஐந்துதலை நாகபாம்பின் படமெடுத்த உருவ அமைப்பு 'குண்டலினி' சக்தியைக் குறித்து நிற்கிறது. அல்லாமலும் தொன்மையான நாக வழிபாட்டையும், நஞ்சை அடக்கி நலம்பயக்கும் தத்துவத்தையும் வெளிக்காட்டுகின்றது. 'மணிபல்லவம்', 'மணித்தீவு', 'நாகதீபம்' எனப்பல பெயர்களால் அழைக்கப்படும் நயினாதீவு, இப்பெயர்களின் ஊடாகக் குறிக்கப்படும் வரலாற்று முக்கியத்துவங்களையும் சுட்டி நிற்கின்றது. சிவனொளி பாதமலை, கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களைப் போன்று நயினாதீவும் தொன்மைச் சிறப்பும், முன்னைப் பெருமையும் உடையதாகும்.

இந்துக்கள் சக்திபீடம் எனவும், பௌத்தர்கள் புத்தபீடிகை என்றும் வழிபடும் பீடங்கள் இங்கிருக்கின்றன. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் "மணிபல்லவம்" நயினா தீவுதான் என்றும் சொல்லப்படுகின்றது.

இத்தகைய தொன்மைச் சிறப்புப்பெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. வேண்டுவன வேண்டியவர்க்கு வேண்டியபடி அருளும் அன்னை நாகபூஷணி அம்மன் உற்சவகாலத்தில் பக்தர்தம் இடம் தேடி வந்து அருள் பாலிக்கிறாள். அவள் அடி பணிந்து வணங்கி நல்வாழ்வு பெறுவோம். ★

# அம்பாறையில் புலிகளின் அலுவலகம் திறந்துவைப்பு

அம்பாறை,ஜூன்10

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை அலுவலகம் கல்முனை நகரில் கடந்த வெள்ளியன்று மாலை திறந்து வைக்கப் பட்டது.

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில், பாத்திமா கல்லூரிக்கு அருகில் திறந்து வைக்கப்பட்ட இந்த அலுவலக திறப்பு விழாவில் - மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் சி.கரிகாலன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை நிர்வாகப் பொறுப்பாளர் சுகி மற்றும் மகளிர் அரசியல் துறை உதவிப் பொறுப்பாளர் காயா, அம்பாறை மாவட்ட பொருண்மிய பொறுப்பாளர் ஹென்றி, வருவாய்த் துறை பொறுப்பாளர் ஜெனார்த்தனன ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அலுவலக பெயர்ப் பலகையை அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் பாவா திரைநீக்கம் செய்துவைத்தார். அலுவலகத்தை திருமதி எழுபதி கரிகாலன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். (ம-6-9)

## முல்லைத்தீவிலிருந்து நோயாளி வருகை

தென்மராட்சி,ஜூன்10

முல்லைத்தீவு மருத்துவமனையிலிருந்து புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த கே.கோபாலசுந்தரம் (வயது 43) என்பவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டு மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-9-117)

# கல்விச்சாலைக் காட்சிகள்




குருநகர் சென்ஜேம்ஸ் ம.வியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'அறிவகம்' அடிப்படைக் கற்கைநெறி தொடக்க வைபவத்தில் குருநகர் பங்குத்தந்தை வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் 'அறிவகம்' நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவரான திருமதி எஸ்.ஏ.அல்போன்ஸ், நிகழ்வுக்கு தலைமை தாங்கிய சே.சுவைனஸ், வலயத் தலைவர்களில் ஒருவரான எ.அன்ரன், கியூடெக் இயக்குநர் வண.பிதா சீ.ஜே.ஜெயக்குமார் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ம-51)



யாழ். சைவ பரிபாலன சபையினரால் புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கம் சூட்டும் விழா அண்மையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன.

இந்தப்போட்டிகளில் மத்தியபிரிவில் முதலாம் இடத்தைப்பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி பிரகஸ்வினி ரஞ்சனுக்கு பிரதமவிருந்தினரான யாழ்.மத்திய கல்லூரி அதிபர்.க.இராசதுரை தங்கப்பதக்கம் அணிவித்து பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம-7)



நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் உப அதிபர் ந.நகுலநாதன் தமது ஆசிரிய சேவையில் 25 வருடங்கள் பூர்த்திசெய்த வெள்ளி விழா நிகழ்வு பாடசாலைச் சமூகத்தால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின்போது வெள்ளிவிழா நாயகனுக்கு மாணவத் தலைவன் செ.இராஜேஸ்வரன் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ம-51)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனையாகின்றன

எழுதுவினைஞர் மற்றும் போட்டிப் பரீட்சைகளுக்கு பொது உளச்சார்பு (நுண்ணறிவு), மொழித்திறன், வியாழ மாற்றம், ஆங்கிலத்தில் கட்டுரைகள், அழகியல் (தரம் 1-5) எங்கும் விற்பனையாகின்றன. V.A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்கத் தவறாதீர்கள். (4689)

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய HONDA LANCIN Lx100-3 மோட்டார் சைக்கிள் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சுப்பிரமணியம், ஸ்ரீ பவனம், முத்தட்டு மட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. (4681)

பகிறா பாம் No.1 புறொயிலர் குஞ்சுகள் நாளை மாலை பெற்றுக்கொள்ளலாம். முன்பதிவு செய்தவர்கள் மாலை 6.00 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: இல.40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (4686)

20H.P லீஸ்டர் எஞ்சினுடன் கூடிய சைனிஸ் டைனமோ 7.5 K.W. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.T. இரவீந்திரராஜா, 109, பலாலி வீதி, திருநெல்வேலி (தபால்பெட்டி சந்தி). (4677)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தினமும் இலவசமாய் சுத்தம்செய்து, வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். 1Kg 170/=. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (4666)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, ஞானசம்பந்தர் ஒழுங்கை, சின்னராசா (சங்கரத்தை) தோட்டத்துக்கு அருகில் 10 பரப்புக் காணியும், வீடும் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகளுக்கு: க.பிரபாகரன், 52/2, வைமன் வீதி, நல்லூர். T.P: 021 - 2157. (4698)

## தவறிவிட்டது

இல.51, அம்பலப்பெருமாள் குளம, அக்கராயன் எனும் முகவரியைச் சேர்ந்த கிட்டினன் சந்திரமோகன் எனபவரின் தே.அ.அ. (இல.823472633V) 08.06.2002 அன்று கைதடிக்கும் - மருதனார்மடத்துக்குமிடையில் Bag கோடு(பை) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரட்ணா சலூன், கைதடிச் சந்தி, கைதடி அல்லது வாணி விலாஸ், மானிப்பாய் வீதி, மருதனார்மடம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (4694)

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி N.சிவநேசன் என்பவரின் கிளினிக் கொப்பி மற்றும் பல பொருள்கள் அடங்கிய கறுப்பு நிறத் தோற்பை 05.06.2002 அன்று முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத் துதவவும். (4688)

46, அம்பாள் வீதி, நாயன்மார் கட்டைச் சேர்ந்த சிவபாதவிருதயர் சோதிநாதன் என்பவரின் தேசிய அ. அட்டை (இல.571561832X), விசேட அ.அட்டை என்பன 06.06.2002 வியாழக்கிழமை யாழ்.சிவன்கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவன்கோயில் குருக்களிடம் ஒப்படைத்துதவவும். (4678)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி?, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகம், 3.யாழ்ப்பாணம், 4.இலக்கியக் கட்டுரைகள், 5."வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும், 6.ஒரு காதலின் கதை நாவல். (4523)

# ஆசிரியை தேவை

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து (பிற்மன்) ஆசிரியை உடன் தேவை. சான்றிதழுடன் நேர்முகப்பரீட்சைக்கு 12.06.2002 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு எமது அலுவலகத்திற்கு சமுகம் அளிக்கவும்.

மக்கள் நலன்காக்கும் பிரிவு,
இருபாலைச்சந்தி, கோப்பாய்.

(4699)



# கோமாதா

கோமாதாவைக் காணவில்லை. எங்கள் ராணியை ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

மூத்தவிநாயகர் தேவஸ்தானம்.
கரணவாய். (4692)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 - 01 - 1922



மறைவு 11 - 05 - 2002

## திருமதி வல்லிபுரம் பார்வதி

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீர்களே!*
*உங்களை நாங்கள் மறக்கவே முடியாது.*
*ஆத்மா சாந்தி அடைக!*

எமது அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த, எம்மீது அன்புள்ளங்கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (10.06.2002) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மூன்று கோவிலடி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (4697)

*உங்கள் நினைவில் வாழும்:*
- பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## தேங்கி நிற்கும் கழிவு நீரால் துர்நாற்றம்

கொழும்புத்துறை,ஜூன்10

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கல மாதா கோயிலுக்கும் ஆஸ்பத்திரிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

## தென்மராட்சி வலயம் மீண்டும் சாவகச்சேரியில்!

தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு முன்னால் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

மேற்படி அலுவலகம் இடம்பெயர்வின் பின்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கிவந்ததும், முன்பு சாவகச்சேரியில் இயங்கிய அலுவலகக் கட்டடம் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(எ-13-117)

## மந்துவில் ஸ்ரீபாரதி, றோ.க.வித்தியாலய மாணவர்களுக்கு!

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் மற்றும் மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்று, இடம்பெயர்வால் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 11 மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக, கணிப்பீட்டுப் புள்ளிகளுடன் இன்று திங்கட்கிழமை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள ஏசியன் கல்வி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கேட்டுள்ளனர். (ஒ-ரி)

## வலி. மேற்கில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வட்டுக்கோட்டை,ஜூன்10

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வலிமேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பதில் பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## விவசாயம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்10

தென்மராட்சி விவசாய சம்மேளனங்களுடனான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு உதவி ஆணையாளர் தலைமையில் சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப்பகுதி விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் ஆகியோரைத் தவறாது இதில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## தீவக வலய சைவசமய பாட ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்10

தீவக வலயப் பாடசாலைகளில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சைவபரிபாலன சபை ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


தீவக கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையிலான வகுப்புக்களில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை இக் கருத்தரங்கில் கலந்து பயன் பெறுமாறு சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (ஓ-ரி)

## போராளி உயிரிழப்பு

கிளிநொச்சி,ஜூன்10

மன்னார் பகுதியில் கடந்த முதலாம் திகதி ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தின்போது விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் கடந்த 4ஆம் திகதி வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமிழ்பிறை என்று அழைக்கப்படும் ஐயாத்துரை யசோதரன் (மூன்றாம் வாய்க்கால், பன்னங்கண்டி, கிளிநொச்சி) என்ற போராளியே வீரச்சாவடைந்துள்ளதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. (ஐ-6-9)



நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

நித்திய அன்னதானம் பற்றிய

## விசேட அறிவித்தல்

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிப்பதற்கு வரும் அடியார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளன. திருவருளைப் பருகிச் செல்லும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கவென ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதியில் நித்திய அன்னதானம் அம்பிகையின் அருளாசியுடன் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 1998இல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து நித்திய அன்னதானம் அடியார்களின் பேராதரவுடன் குறைவின்றி சுமார் 3வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மஹோற்சவ காலம் (16நாள்) தவிர ஏனைய நாள்களில் இத்திருப்பணி நித்திய அடியார் பணியாக நிறைவேற்றப்படுகின்றது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது படைக்கும் அன்னையின் திருவருள்தான் என்னே!

நீங்களும் இத்திருப்பணியில் இணைந்து அடியார்களுக்கு அமுது படைக்கும் அருட்பணியில் பங்குபற்றுங்கள். ஒரு முறை மட்டும் ஐயாயிரம் (5000/=) ரூபா செலுத்தினால் போதும். உங்களின் பெயரால் ஆண்டு தோறும் குறிப்பிட்ட திகதியில் நித்திய அன்னதானம் வழங்கப்படும், பணத்தை ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலோ அல்லது யாழ். வர்த்தக வங்கியின் 12330 கணக்கு இலக்கத்திலோ அல்லது புறக்கோட்டை வர்த்தக வங்கியின் 01~2426285~01 கணக்கு இலக்கத்திலோ வைப்பிலிடலாம். "பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி , அம்மன் கோவில், நயினாதீவு" என்ற முகவரிக்கு தபாற்கட்டளையாகவோ அல்லது காசோலையாகவோ வரைய முடியும். இத்திட்டத்தின் கீழ் இணைந்து அன்னையின் அருளாசியினைப் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம்.

வேறு தனி நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ நித்திய அன்னதானம் தொடர்பாக நிதி வசூலிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C/22456)

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்

# சீரணி, சண்டிலிப்பாய் பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்டம்

*இடம்:* பாடசாலை மண்டபம்
*காலம்:* 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:* சகல பழைய மாணவர்களும் தவறாது சமுகம் தரவும். புதிய அங்கத்தவர்களும் இணைந்து கொள்ளலாம்.

(4690) பழைய மாணவர் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா மகேஸ்வரி

உரும்பிராய், சிவகுல வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா மகேஸ்வரி அவர்கள் நேற்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் Dr.சிவானந்தன், Dr.சதானந்தன், கலாதேவி, Dr. உமாராணி, சிவகுமாரி, நித்தியானந்தன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் மணிவாசகம், Dr.குணாளன், சிறீசங்கர், நிரஞ்சலா, மஞ்சு, Dr.யசோ ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், தனலட்சுமி, நீலாம்பரம் மற்றும் பேரானந்தன் (தினக்குரல் - கொழும்பு), குணராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.06.2002) புதன்கிழமை 14, புதுச்செட்டித்தெரு, கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*உரும்பிராய்.*
*T.P.:01-435837* (4695)

தகவல்:
செ.குணராசா
*(சகோதரன்).*

## சின்னத்தம்பி செல்வகுமார்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வகுமார் 07.06.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.சின்னத்தம்பி (கட்டட ஒப்பந்தகாரர்) - லூசி தம்பதிகளின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கரன், செல்வி, ஆரணியா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஞானராஜாவின் அன்பு மருமகனும், செல்வநாயகி, செல்வநாயகம் (அரசாங்க ஒப்பந்தகாரர்), செல்வசீலன் (உரிமையாளர், அலோமாஸ், சுன்னாகம்), செல்வறஞ்சினி (கனடா), செல்வறஞ்சன் (ரஞ்சன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"செல்வவாசா",*
*பெண்கள் பாடசாலை மேற்கு வீதி,*
*உடுவில்.* (4696)

தகவல்:
சி.செல்வநாயகம்
(சகோதரன்).

# அமெரிக்க உதவியைப் பெற்றதற்காக என்றோ ஒருநாள் இலங்கை வருந்தும்!

**சிறிலங்கா அரசு திருகோணமலைத் துறைமுகத்தையும் அங்குள்ள எண்ணெய்க் குதங்களையும் காட்டி இந்தியா மற்றும் அமெரிக்காவின் உதவிகளைப் பெற்று, விடுதலைப் புலிகளை முடக்கினாலும் அதனால் பலன் ஏதுமில்லை என்பதை எம்மால் உணரநேரிடும். ஆசியாவில் அல்லது மத்திய கிழக்கில் யுத்தமொன்று வெடிக்கும்போது எம்மீது அமெரிக்க விரோத சக்திகள் குண்டுமழை பொழியும்போது எமது ராஜதந்திரத்தில் ஏற்பட்ட தவறை உணரமுடியும் என்கிறார் கட்டுரையாளர் பாலித அமரசூரியா. "லக்பிம" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

திருகோணமலைத் துறைமுகத்தைப் போலவே திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்கள் பத்தை இந்தியாவுக்கு குத்தகைக்குக் கொடுப்பது தொடர்பாக இருநாட்டு அரசுகளும் ஆர்வங்காட்டுகின்றன. இந்திய அரசுக்குச் சொந்தமான இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் (INDIAN OIL CORPORATION) திருகோணமலையில் உள்ள 10 எணணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக உத்தியோக பூர்வமான இறுதிமுடிவை சிறிலங்கா அரசு கடந்த மாதம் 23ஆம் திகதி எடுத்தது.

சிறிலங்கா முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி அர்ஜுன மகேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், பிரதமர் இந்த விடயம் குறித்து தனது இந்திய விஜயத்தின்போது பேச்சுக்களை நடத்தக்கூடும் எனத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவது மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது முதலீட்டுச் சபைக்குரிய விடயங்கள் ஆயினும், தற்போது உலகின் கண்களை உறுத்திக்கொண்டிருக்கும் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக சிறிலங்கா மற்றும் இந்தியப் பிரதமர்கள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை குத்தகைக்குப் பெறுதல் மற்றும் குத்தகைக்கு வழங்குதல் ஆகியன இருநாடுகளைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். காரணம், இதில் யுத்தம் தொடர்பான பல விடயங்கள் அடங்கியுள்ளன.

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இருநாடுகளுக்கும் யுத்தத்திற்கும் தொடர்புகள் உள்ளன. "சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்போம்" என்ற ஒரு நல்ல கருத்தை முன்வைத்து தற்போது பல நாடுகளின் விடயங்களில் அமெரிக்கா தலையிடுகிறது. அமெரிக்கா அண்மையில் தனது அதிருப்தியை இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளது. அமெரிக்க ராஜாங்க அமைச்சு சில வாரங்களுக்கு முன்னர் "உலக பயங்கரவாதத்தின் வடிவங்கள் - 2001" (PATTERN OF GLOBAL TERRORISM) என்னும் அறிக்கையை வெளியிட்டது. அதில் இந்தியா பயங்கரவாதத்திற்கு ஊக்கம் அளிப்பதாகவும், அதை மட்டுப்படுத்தும்படியும் அமெரிக்கா இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளது.

ஒருவருக்கு ஒருவர் அதிருப்தியடைந்துள்ள இந்தியாவும் அமெரிக்காவும் தற்போது சிறிலங்காவில் ஆர்வங்கொண்டுள்ளன. திருகோணமலையிலுள்ள சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான எண்ணெய்க் குதங்களையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் கைப்பற்றும் எண்ணத்துடன் இந்தியாவும், அமெரிக்காவும் சிறிலங்கா அரசுடன் பேச்சுக்களை நடத்துகின்றன.

அமெரிக்காவுக்கு இந்தியா மீது வெறுப்பு ஏற்படும்போது - இந்தியா மீது தாக்குதல்களை மேற்கொள்ள திருகோணமலையை அமெரிக்கா பயன்படுத்தும்போது - திருகோணமலை மீது இந்தியா தாக்குதலை மேற்கொள்ள முயலும். இந்தியாவுக்கு எண்ணெய்க் குதங்கள் வழங்கப்பட்டால் இவ்வாறான பிராந்திய யுத்தத்தின்போது அமெரிக்கா திருகோணமலை மீது தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும்.

## திருகோணமலை மீது ஜப்பானியர் தாக்குதல்

2ஆவது உலக யுத்தத்தின்போது பிரிட்டனும், ஜப்பானும் பகைமை கொண்ட சமயமும் இதுவே இடம் பெற்றது. அந்த பகைமை காரணமாகவே ஜப்பானியர்கள் திருகோணமலை மீது குண்டுகளை வீசினர்.

1941இல் 2ஆவது உலக யுத்தத்தில் ஈடுபட்ட ஜப்பான், 09.04.1942 அன்று திருகோணமலை மீது குண்டுகளை வீசியது. தங்களது ஆற்றலை பிரிட்டிஷாருக்குத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே ஜப்பான் அச்செயலை மேற்கொண்டது.

09.04.1942 அன்று காலை 6.30 மணி இருக்கும் திருகோணமலை நகரம் சுறுசுறுப்பானது. ஜப்பானிய விமானங்கள் திருகோணமலையை வட்டமிட்டன. அந்த விமானங்களில் இருந்து வீசப்பட்ட வெள்ளி நிறங்களிளான பீப்பாக் குண்டுகள் திருகோணமலைக் கப்பல்கட்டும் தளத்திலும், சீனன் குடாவில் இரு இடங்களிலும், எண்ணெய்க்குத வளாகத்திலும் வீழ்ந்து வெடித்தன.

இநதக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததால் நூற்றுக்கணக்கானோர் கொலலப்பட்டனர்;. பல்வேறு இடங்களில் பிணங்கள் காணப்பட்டன. இருப்பினும், ஜப்பானியரின் குண்டுகள் சரியான இலக்குகளில் தாக்கவில்லை. சீனன் குடாவில் 1929-30 ஆண்டுகளில் பிரிட்டிஷாரால் அமைககப்பட்ட எண்ணெய்க் குதங்களே ஜப்பானியரின் இலக்காக இருந்தது. அந்த எண்ணெய்க் குதங்கள் நேச நாடுகளின் கப்பல்களுக்கும், விமானங்களுக்கும் எரிபொருள்களை விநியோகிப்பதற்காக பிரிட்டிஷாரால் அமைக்கப்பட்டன.

ஜப்பானியரின் தற்கொலைப் படையான "கம்காசே" வீரர்கள் விமானங்களில் இருந்து எண்ணெய்க்குத வளாகப் பகுதிக்குள் குதித்தனர். இதற்கென குண்டுகள் நிரப்பப்பட்ட விமானம் ஒன்றையும் மூன்று தற்கொலைப் படை வீரர்களையும் ஜப்பான் பயன்படுத்தியது. அந்த விமானம் எண்ணெய்க்குத வளாகத்தினுள் வீழ்ந்து மோதியபோதிலும் இம்முறையும் ஜப்பானியரின் இலக்குச் சரியாக அமையவில்லை. அங்கிருந்த 101 எண்ணெய்க் குதங்களில் 91ஆம் இலக்கத்தையுடைய ஒரு குதம் மாத்திரமே சேதமடைந்தது.

சீனன் குடாவில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குதமொன்றில் 12 ஆயிரத்து 100 மெற்றிக்தொன் எண்ணையைக் களஞ்சியப்படுத்தலாம். மேற்குறிப்பிட்ட விமானம் 91ஆம் இலக்க எண்ணெய்க் குதத்தின் மீது வீழ்ந்து மோதியபோதிலும் அந்த எண்ணெய்க் குதம் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. தாக்குதலுக்கு இலக்கான எண்ணெய்க் குதத்தையும் வீழ்ந்து மோதிய விமானத்தின் சிதறல்களையும் இன்றும் எண்ணெய்க்குத வளாகத்தில் காணலாம்.

எண்ணெய்க்குத வளாகம் ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமானது. 2ஆம் உலக யுத்த காலத்தில் அங்கிருந்த 101 எண்ணெய்க் குதங்களிலும் எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தன. யுத்தத்தின்போது இரு குதங்கள் மட்டுமே சேதமடைந்தன. ஏனைய 99 குதங்களும் பின்னர் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமாயின. அவ்வளவு பாரிய எண்ணெய்க் குதங்களைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு இருக்கவில்லை. எனவே, காலப்போக்கில் அந்தக் குதங்கள் கவனிப்பாரற்ற நிலையை அடைந்தன.

அவற்றில் 11 குதங்களை மாத்திரமே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பயன்படுத்திவருகிறது. இந்த எண்ணெய்க் குதங்கள் அனைத்தும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன என திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களுக்குப் பொறுப்பான டொமினிக் கொறயா தெரிவிகிறார்.

திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய பகுதியில் இந்த எண்ணெய்க் குதங்கள் யுத்த தேவைக்காவே அமைக்கப்பட்டன. எனவே, இவை யுத்த காலத்தில் மிகவும் பெறுமதிமிக்கன.

## கேந்திர முக்கியத்துவம் பெற்ற துறைமுகம்

உலகிலுள்ள இயற்கையான, ஆழம்மிக்க துறைமுகங்கள் ஒரு சிலவற்றினுள் திருகோணமலைத் துறைமுகமும் ஒன்றாகும். எனவே, யுத்தகாலத்தில் இத்துறைமுகம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அங்கும் இங்கும் செல்லும் யுத்தக் கப்பல்களுக்கு எரிபொருள்களை வழங்குவதற்கு திருகோணமலையைவிட வேறு சிறந்த இடம் எதுவுமில்லை.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தங்கள போராற்றலை உறுதிப்படுத்த முயலும் இருநாடுகள் உள்ளன. அவை இந்தியாவும், அமெரிக்காவுமாகும். இந்தியாவின் செயற்பாடுகளை அறிய அமெரிக்கா முயலும்போது அமெரிக்காவுக்கு சிறிலங்கா நிலப்பரப்பில் காலூன்றுவது அத்தியாவசியமாகிறது. அமெரிக்காவின் அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு சிறிலங்கா நிலப்பரப்பில் இந்தியா கர்லூன்றுவது அத்தியாவசியமாகிறது.

இந்தியாவை ஓரங்கட்ட சிறிலங்கா முற்படும்வேளைகளில் அமெரிக்காவை சிறிலங்காவில் காலூன்ற அனுமதிக்கப்போவதாக சிறிலங்கா காட்டிக்கொள்கிறது. இது கடந்தகாலங்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்தியா மூச்சுவிடும் ஓசை கேட்கும் எல்லையில் அமைந்துள்ள திருகோணமலை எண்ணெய்க் குதங்கள்பற்றி அமெரிக்காவுக்குப் பிரஸ்தாபிப்பது இத்தகைய ஒரு நடவடிக்கையே ஆகும்.

1980களில் இந்திராகாந்தி இந்தியப் பிரதமராக இருந்தபோது தமிழ் ஆயுதக் குழுக்கள் பயிற்சியளிக்கப்பட்டு, தங்க வசதியளிக்கப்பட்டு போஷிக்கப்பட்டன. அப்போது சிறிலங்காவின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்., இந்தியாவை ஓரங்கட்ட முறபட்டார். அமெரிக்கக் கடற்படையினர் தங்கிச் செல்வதற்கும் மீளமைவதற்கும் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படையினர் பயன்படுத்த ஜே.ஆர். அனுமதித்தார். இதற்கான உடன்பாடு இருநாடுகளுக்கு மிடையே கைச்சாத்தானது.

சுமார் 40 நிமிடங்களில் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை நகருக்கு விமானத்தில் செல்லக்கூடிய தூரத்தில் திருகோணமலை அமைந்திருப்பது இந்தியாவுக்கு பெரும் தலையிடியாயிற்று. இந்தத் தலையிடிக்கு மருந்து தேடுவதில 1987இல் ராஜீவ் காந்தி அரசு ஈடுபட்டது. பொருத்தமான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இந்தியா 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட இலங்கை - அமெரிக்க ஒப்பந்தத்தை சர்சைகள் எவையும் இன்றி ரத்துச் செய்யவேண்டிய நிலை சிறிலங்காவுக்கு உருவானது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி திருகோணமலை மாத்திரமன்றி சிறிலங்காவில் எந்தவொரு துறைமுகமும் இந்தியாவின் உடன்பாடின்றி வேறு எந்தவொரு நாட்டிற்கும் யுத்தத தேவைகளுக்காக வழங்கப்படக்கூடாது என்ற நிபந்தனைக்கு ஜே.ஆர். உடன்பட நேர்ந்தது.

பிரித்தானியரால் கைவிடப்பட்ட - சிறிலங்கா அரசால் கைவிடப்பட்ட - ஆனால் இந்தியாவால் கைவிடமுடியாத திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவாலும் கைவிடமுடியாதுள்ளது என்பதை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதை அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் நகரில் செயற்படும் 'ஸ்ரட்பர்' (STRATFOR) புலனாய்வு நிறுவனத்தின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

## அமெரிக்காவின் ஆர்வம்

சிறிலங்காவில் அமெரிக்கக் கப்பல் கட்டும் துறையை அமைப்பதற்கும், படையணியை நிறுத்தி வைப்பதற்கும அந்த நாடு சிந்திப்பது மாத்திரமன்றி செயலிலும் ஈடுபட்டுள்ளது என அந்த நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மார்ச் மாதம் சிங்கப்பரில் வெளியான 'ஸ்ட்ரேட்ஸ் ரைம்ஸ' (STRAITS TIMES) பத்திரிகையில் இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து இந்த விவரங்கள் உலகெங்கும் தெரியவந்தன.

இந்தியா மற்றும் ஆப்கான் உட்பட்ட ஆசிய வலயத்திற்கும் மத்திய கிழக்கு வலயத்திற்கும் மத்தியில் சிறிலங்கா அமைந்துள்ளதால் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் போராற்றலை அறிந்துகொள்வதற்கும் மத்திய கிழககின் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்துத் தயார்நிலையில் இருப்பதற்கும் பொருத்தமான - நல்ல இடம் சிறிலங்காவே என அமெரிக்கா தீர்மானித்துள்ளது என "ஸ்ரட்பர்" அறிக்கை தெரிவித்துள்ளது.

ஏதாவது காரணத்தின் நிமித்தம் இந்த நாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உருவாகும்போது சிறிலங்காவில் உள்ள துறைமுகங்கள் அந்த நடவடிக்கைக்குப் பயன்படுத்த மிகவும் பொருத்தமானவையாகும். யுத்தக் கப்பல்களைத் தரித்து நிறுத்த, எரிபொருளை நிரப்ப மற்றும் முக்கிய தேவைகளுக்கும் அது வசதியாக இருக்கும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு திருகோணமலைத் துறைமுகம் மிகவும் பொருத்தமானதாகும்.

யுத்தத்தின்போது எரிபொருளை நிரப்புவதற்கு திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களைப் போல இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வேறெங்கும் எண்ணெய்க் குதங்கள் இல்லை.

கடந்த மார்ச் 15ஆம் திகதி தென்னாசிய வட்டகைக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பிரதிச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்கா யாழ்ப்பாணத்திற்குச் செல்லும்போது திருகோணமலைத் துறைமுகத்தையும் எண்ணெய்க் குதங்களையும் சென்று பார்த்துள்ளார். அவருடன் அமெரிக்கக் கடற்படையின் தளபதி திமதி கொம்பியும் சென்றுள்ளார்.

இவர்கள் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடவும், திருகோணமலைத் துறைமுகத்திற்கு அண்மையில் அமெரிக்கக் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கும் நோக்குடனுமே சிறிலங்கா வந்தனர் எனவும் -

யாழ்ப்பாணத்தில் நிலக்கண்ணிகளை அகற்றும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வரவில்லை எனவும் -

போரியல் வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். இருப்பினும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸும் சிறிலங்கா அரசும் இதை நிராகரிக்கின்றனர்.

அமெரிக்காவால் இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளில் இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டுவரும்வேளையில், சிறிலங்காவிலும் அவ்வாறான தளம் அமைக்கப்படும் என கடந்த ஒக்ரோபர் 3ஆம் திகதி வெளியான 'பினன்ஷியல் ரைம்ஸ்' (FINANCIAL TIMES) பத்திரிகை தெரிவித்தது.

**தமிழில்: கஜனி**

அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் சில கொழும்புத் துறைமுகத்துக்குச் செல்லும் எனவும், அது தொடர்பான நிலைமைகளை அவதானிக்க அமெரிக்க வல்லுநர்கள் கொழும்பு சென்றுள்ளனர் எனவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. இருப்பினும், வழமைபோலவே இதை அமெரிக்கத் தூதரகமும் சிறிலங்கா அரசும் நிராகரித்தன.

இந்தக் கதைகள் பரவத் தொடங்கி சுமார் 6 மாதங்களுக்குப் பின்னர் அமெரிக்க யுத்தக் கப்பலான 'யுஎஸ்.எஸ்.ஹொப்பர்' எரிபொருளை நிரப்ப கொழும்புத் துறைமுகம் வந்தது. கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி எரிபொருள் நிரப்புவதற்காக சுமார் 10 மணியத்தியாலங்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநின்று சென்றது. அதன்பின்னர் கடந்த மாதம் 11ஆம் திகதி 'யுஎஸ்.எஸ். ஸயிட்ஸ்' என்ற யுத்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து 4 நாள்கள் தரித்துநின்றது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிறிலங்காவில் உள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண மேனன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திருகோணமலை முகாமையாளர் டொமினிக் கொறயாவுடன் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களைப் பார்வையிடச் சென்றிருந்தார். அந்தப் பயணத்தின் போது இந்தியத் தூதரகத்தின் வர்த்தக நடவடிக்கை ஆலோசகர் அசோக்கும் சென்றிருந்தார். எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்குப் பெறுவதனால் கிடைக்கும் வர்த்தக ஆதாயங்கள் குறித்த ஆலோசனைகளை வழங்கவே அசோக சென்றிருந்தார்.

அதேபோலவே எண்ணெய்க் குதஙகள் அமைந்துள்ள வளாகத்தின் பாதுகாப்பு ஒழுங்குகளைக் கண்டறிய இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கோபிநாத் சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின் பின்னர் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களில் பத்துக் குதங்களை இநதியா குத்தகைக்குப் பெற இணங்கியுள்ளதாக கதைகள் பரவத் தொடங்கின. இந்தக் குத்தகை விவகாரம் தொடர்பாகப் பேச்சுக்களை மேற்கொள்ளவே பிரதமர் ரணில் விக்கிரசிங்க தற்போது இந்தியா செல்கிறார் என்றும் கதைகள் அடிபடத் தொடங்கின.

இந்தியா திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுப்பதானது சிறிலங்கா அமெரிக்காவை மட்டும் சார்ந்துள்ளது என்ற எண்ணத்தைச் சிதறடித்துள்ளது. ஆனால், ஏனைய எண்ணெய்க் குதங்கள் விற்கப்படவுள்ளதால் அவற்றை அமெரிக்கா கைதறைவிடாது என்றே நினைக்கலாம். 89 எண்ணெய்க் குதங்கள் எஞ்சியிருப்பதால் 10 குதங்களை மாத்திரம் இந்தியா குத்தகைக்கு எடுப்பதன் மூலம் அந்நாடு என்ன மேலதிக ஆற்றலைப் பெறப்போகிறது எனக் கூறமுடியாது.

இந்த எண்ணெய்க் குதங்கள் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டவையாகும். விடுதலைப் புலிகள் பலவீனமடைந்தால் மாத்திரமே இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ திருமலையில் தங்கிச் செயற்பட முடியும். 'ஸ்ரட்பர்' அறிக்கையின்படி எண்ணெய்க் குதங்கள் மீதும் திருகோணமலைத் துறைமுகம் மீதும ஆர்வங்கொண்டுள்ளதாலேயே சமாதான வழிமுறைகளை அணுகுமாறு அமெரிக்கா விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

சமாதான நடவடிக்கைகளில் இந்தியாவும் பங்குபற்ற வேண்டும் என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை குத்தகைக்குப் பெற்று அதன் மூலம் இந்தியா பயனடைய வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் சமாதான வழிமுறைகளுக்கு வந்தாகவேண்டும். இந்தியாவுக்கு எண்ணெய்க் குதங்களை வழங்குவதன் மூலம் சிறிலங்கா அரசுக்கு ஒரு லாபம் கிட்டலாம். அதாவது சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பை அரசு பெறமுடியும்.

இந்த எண்ணெய்க் குதங்களையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் காட்டி - அவர்களின் ஒத்துழைப்புடன் - விடுதலைப் புலிகளை ஒழிப்பதால் எதுவித பயனும் இல்லை என்பது ஆசியாவில் அல்லது மத்திய கிழக்கில் யுத்தம் ஒன்று வெடிக்கும்போது உணரமுடியும். அமெரிக்கா, இந்திய மீது அல்லது ஆப்கான் மீது அல்லது வேறு எந்தவோர் அராபிய நாடு மீது சிறிலங்காவில் தளம் அமைத்துத் தாக்குதலை மேற்கொள்ளும்போது அமெரிக்க விரோதசக்திகள் எங்கள் மீது குண்டுமழை பொழியும் அப்போது எமது ராஜதந்திரத் தவறை உணரமுடியும. ஆனால், அது காலந்தாழ்த்தியதாக- கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமாக - இருக்கும்.

2ஆவது உலக மகா யுத்தத்தின் போது சிறிலங்கா பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காரணத்தால் எமது நாட்டின்மீது ஜப்பானியர் குண்டுகளை வீசினர். அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர். எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள் இந்நாட்டின் அப்பாவி மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுவதற்கு இந்த உடன்பாடுகள் வழிவகுக்கும் எனக் கூறின் அது தவறாகாது. ★

# ஆளுமையுடன் அடக்கம் உள்ளவரே சமூகத்தில் உயர்ந்தவராகலாம்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஜூன்10

'ஆளுமையுடன் அடக்கமும் உள்ளவரே சமூகத்தில் உயர்ந்தவராகலாம் என்பதை எடுத்துக்காட்டாகக் கொண்டு வாழ்ந்துகாட்டி மறைந்தவர் சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி'.

- இவ்வாறு நேற்று நடைபெற்ற "சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி ஆளுமையும் ஆக்கமும்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய கவிஞர் சு.வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஒருவர் அறிஞராகவோ, பெரியாராகவோ உருவாவதற்கு ஆளுமையும், பண்பும், அடக்கமும், அறிவும் முக்கியமானவை. இதனை கைலாசபதி நிறையவே பெற்றிருந்தார்.

இன்று நாம் போற்றும் பெரியார்களான கணபதிப்பிள்ளை, ஆறுமுக நாவலர் உட்படப் பலரும் இத்தகைய பண்புகளைப் பெற்றிருந்தனர். அவர்களின் இந்த நிலைமைகளை வெளியுலகு அறிவதற்குச் சான்றாக அமைந்தவை அவர்கள் பின்னே அறிவுக் காய்த் திரண்ட மாணவர் கூட்டமாகும். அவ்வாறு அறிஞர்கள் பின் திரண்ட அறிவாளர்களில் ஒருவரே பொ.கைலாசபதி. தமிழ்ப்பற்றும், ஆற்றலும் இவரது எழுத்தாற்றல்மூலம் வெளிப்படுகின்றன.

அவரிடம் கற்ற எத்தனையோ அறிஞர்களை இந்தத் தமிழ் மண் இன்றும் சுமந்துகொண்டிருக்கிறது.

இவர்களது வழிகாட்டல் மூலமாகவே இன்றுவரை தமிழ் அழியாத செல்வமாக விளங்கி வருகின்றது.

இவர்களது வழியில் இனிவரும் காலங்களிலும் இளையதலைமுறையினர் இந்த அறிஞர்களின் சேவைகளை நினைவு கூர்வதுடன் அவர்களின் வழிகளையும் பின்பற்றவேண்டும். தமிழின் பெருமையை உலகிற்கு விளக்கவேண்டும்.

இன்றைய தலைமுறை எழுத்தாளர்கள் பலர் இன்னமும் வளர்ச்சி பெறவேண்டிய நிலையிலேயே உள்ளனர். அதனை அவர்கள் கருத்தில் கொண்டு வளர்ச்சி அடையவேண்டும்.'

- என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நூல் மதிப்புரை நிகழ்த்திய கலாநிதி க.சொக்கலிங்கம், யாழ்.பல்கலைக்கழக தமிழ் மன்றம் இத்தகைய ஓர் அறிஞரின் சேவையையும், புகழையும் வெளியிடுவதற்கு ஆதரவு வழங்கியதைப் பாராட்டினார்.

நூலின் முதலாவது பிரதியை கவிஞர் சு.வேலுப்பிள்ளையிடம் இருந்து முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி க.சொக்கலிங்கம், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

(ஓ-12)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் பாலச்சந்திரன் சிவகரன்**

மண்ணில் 1980-06-27 — விண்ணில் 2001-05-22

திதி: 2002.06.10

*ஆண்டொன்று சென்றபோதிலும்*
*கரன், நீர் போனதெங்கே!*
*விழிகள் தேடும் இடமெல்லாம் - உந்தன்*
*விம்பம்தானே தெரிகிறது!*
*ஆறாது எம் துயரம் உயிர் உள்ள காலம்வரை*
*காலமெல்லாம் கண்ணீருடன் காத்திருப்போம்*
*உங்கள் அழியா நினைவலைகளுடன்.....!*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
நுணாவில்,
கல்வயல் வீதி, சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா,**
**அத்தான், சகோதரர்கள்.**

(4706)

### மண்டைதீவுப் படுகொலை நினைவாக இன்று திருப்பலி

குருநகர்,ஜூன்10

குருநகரில் இருந்து மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற 31 மீனவர்களை மண்டைதீவுக் கடலில் வைத்துக் கடற்படையினர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட பதினாறாவது வருட நினைவு தினத்தையொட்டி இன்று திங்கட்கிழமை காலை 6.30மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(ஓ-51)


**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்படும்**
**மாபெரும் கல்வியியற் கண்காட்சியும்**
**சாகஸ நிகழ்வும்**



இடம்:- கல்லூரி மைதானம்
காலம்:- ஜூன் 17 தொடக்கம் 20 வரை தினமும்
நேரம்:- காலை 8.30 மணி தொடக்கம்
மாலை 4.30 மணி வரை

*கல்வியியற் கண்காட்சி உட்பிரவேசம் - ரூபா 5*

☞ யாழ்ப்பாண வலயப் பாடசாலைகள் :- 17.06.2002
☞ வலிகாம வலயப் பாடசாலைகள் :- 18.06.2002
☞ வடமராட்சி வலயப் பாடசாலைகள் :- 19.06.2002
☞ தென்மராட்சி, தீவகப் பாடசாலைகள் :- 20.06.2002

*கண்காட்சியைப் பார்வையிடும் பாடசாலைகள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் முன் அனுமதியினைப் பெற்றுப் பங்குகொள்ளுமாறு பணிவாக வேண்டுகின்றோம்.*

கடந்த இரு தசாப்தங்களின் பின் யாழ்ப்பாண மண்ணில் முதன்முறையாக ஆண். பெண் இருசாராரும் ஒரே நேரத்தில் பங்குகொள்ளும் மயிர்க்கூச்செறியும்

☞ பாதாளக் கிணற்றுக்குள் பயங்கர மோட்டார் சைக்கிள் ஓட்டம்
☞ பாதாளக் கிணற்றுக்குள் சைக்கிள் ஓட்டம்
☞ **Merry - Go - Round**
(தென்பகுதியிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்டது)



**அரிய சந்தர்ப்பம்! நழுவ விடாதீர்கள்!**
**வாருங்கள்! கண்டு மகிழுங்கள்!!**

*உட்பிரவேசம்:-*
*பாடசாலை மாணவர்களுக்கு - ரூபா 20.00*
*ஏனையோருக்கு - ரூபா 40.00 (அனுமதி மாலை 2.00 மணியின் பின்)*

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்**

(C/22459)


## காணாமற்போன ஊழியரின் சம்பளத்தை வழங்க நடவடிக்கை

1996ஆம் ஆண்டு காலப்பகுதியல் காணாமற்போன யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர் விஜயகாந்தனின் சம்பள நிலுவையை அவரது மனைவியிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போன ச.விஜயகாந்தன் என்பவரது சம்பளம், அவர் காணாமற்போனதிலிருந்து இதுவரை வழங்கப்படாமல் இருந்தது.

இது தொடர்பாக காணாமற்போனவர்களின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்ததுடன் பிரதமரின் செயலாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இதனையடுத்து சுகாதார அமைச்சுடன் பிரதமரின் செயலாளர் தொடர்புகொண்டு விஜயகாந்தனின் சம்பள நிலுவையை அவரின் மனைவியிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும்-

அதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் - காணாமற்போனோர் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஓ-4-9)

### கண்ணீர் அஞ்சலி

*இறுதிவருட முகாமைத்துவத்துறை மாணவ நண்பன்*

**செல்வன் சூ.அகிலன் அவர்களின்** அன்புத் தந்தையார்

**தம்பிப்பிள்ளை சூடாமணி**

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் மிகவும் துயருறுகின்றோம். இவரது மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிவருட மாணவர்கள்,
முகாமைத்துவத்துறை,
முகாமைக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(4708)

### யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் அறிவித்தல்

**தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் என்பவற்றின் செயற்பாடுகள் யாவும் (விடுமுறைகள் உட்பட) இன்று (10.06.2002) திங்கட்கிழமை முதல் தனியார் கல்வி நிறுவன ஒன்றிய (யாழ்.மாவட்டம்) நிர்வாகத்தின் நெறிப்படுத்துகையின் கீழ் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.**

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்துடனான தொடர்புகள் யாவும் கீழுள்ள முகவரியிலே தற்காலிகமாக மேற்கொள்ளப்படும்.**

**தற்காலிக முகவரி:** *134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*

**செயலாளர்,**
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,**
*யாழ்.மாவட்டம்.*

(4707)

### தசாக கிருஹயக்ஞ அழைப்பு

**அன்புடையீர்!**

**நிகழும் சித்திரபானு வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் (02.06.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தவரான,**

**திருமதி கருணாகரேஸ்வரக் குருக்கள் காமாக்ஷி அம்மா**

**அவர்களுடைய ஆத்மசாந்திக்கிரியைகள் சித்திரபானு வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் நாளை (11.06.2002) செவ்வாய்க் கிழமை தொடக்கம் நடைபெறும்.**

*தசாகம்:* **வைகாசி 28ஆம் நாள் நாளை (11.06.2002) செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணி.**

*கிருஹயக்ஞம், சமாராதனை:* **வைகாசி 31ஆம் நாள் (14.06.2002) வெள்ளிக்கிழமை (மதியபோசனம்) பகல் 11.00 மணி.**

**மேற்படி நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தமது குடும்பத்தாருடன் பங்குபற்றி அன்னாருடைய ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தேகும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

இவ்வண்ணம்:
க.சடாட்சரக் குருக்கள், க.சுரேஸ்வரக் குருக்கள்,
க.செந்தில்நாதக் குருக்கள், க.மகேஸ்வரக் குருக்கள்
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*"சபரிகிரி"*
*இராமகிருஷ்ணபுரம்,*
*மட்டக்களப்பு.*

(4702)

### மரண அறிவித்தல்

**மாணிக்கவேலு காந்தாமணி (சின்னவா)**

வல்வெட்டித்துறை, புதுவளவைச் சேர்ந்த மாணிக்கவேலு காந்தாமணி (சின்னவா) அவர்கள் 08.06.2002 சனிக்கிழமை திருச்சியில் (இந்தியா) காலமாகிவிட்டார்.

அன்னார் புதுவளவைச் சேர்ந்த அருளம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும் நவமணி அம்மா, சரஸ்வதி, ரோகிணி அம்மா, சரவணபவன், காலஞ்சென்ற பறுவதபாக்கியம், லட்சுமி அம்மா, குமரகுரு, கிருஷ்ண கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேஸ்ராம் (ரமேஸ் - லண்டன்), வஸ்தலா (லதா - இந்தியா), சண்முகராம் (பாஸ்கர் - லண்டன்), காஞ்சனா (இந்தியா), நந்தினி (லலி - இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி (கொழும்பு), புவனேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற பரமேஸ்வரி, யோகேஸ்வரி, நடராஜசுந்தரம் (விசுவமடு), பங்கையற்செல்வி (வண்ணக்கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஷித்தாவின் (லண்டன்) அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடையாமணல்,*
*வேம்படி,*
*வல்வெட்டித்துறை.*

(4705)

தகவல்:
பங்கையற்செல்வி (வண்ணக்கிளி),
நடராசா (வேலவன்ஸ்)

# முன்மாதிரியான அரசியல் பண்பாட்டை வளர்த்தெடுத்த பெரும் தலைவர் சிவா

## இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் அன்னாருக்குப் புகழாரம்

கரவெட்டி அத்துளு நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் உள்ள திறந்த வெளி அரங்கில் நேற்று நடைபெற்ற அமரர் சிவசிதம்பரத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட உரைகளிலிருந்து.....

**சனார்த்தனம்**

அமரர் சிவசிதம்பரம் ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழகத் தமிழர்களின் சொத்தும் ஆவார். உலகில் மூலைமுடுக்கெல்லாம் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரேகுரலில் உரிமைப்போர் நடத்துவதற்காக தன்னையே அர்ப்பணித்த பெருந்தகை. அரசியல்மூலம் அவர் வளர்த்த பண்பாட்டை சகல தலைவர்களும் தொடர்ந்து வளர்க்கவேண்டும்.

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு தமிழக மக்கள் எப்போதுமே தங்கள் பங்களிப்பை வழங்கி வந்திருக்கின்றனர். அந்தத் தார்மீக ஆதரவு கிடைக்காது என்று எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஈழத் தமிழர் போராட்டத்துக்கு மக்கள் தமது தார்மீக ஆதரவை வழங்கிக் கொண்டேயிருப்பர் - என்றார்.

**சமிந்ததேரர்**

சமசமாஜக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வண. பத்தேகம சமிந்த தேரர் பேசுகையில் கூறியதாவது:-

நாடாளுமன்றத்துக்கு முதல் தடவையாகத் தெரிவுசெய்யப்பட்ட நான், வயோதிபர் ஒருவர் முச்சக்கர வண்டியில் வருவதைக்கண்டு யாரோ ஒரு வயோதிபர் நாடாளுமன்றம் வருகிறார் என நினைத்தேன். 'அவர் பேச ஆரம்பித்ததும் அவர் வயோதிபரா? இளைஞரா? என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

இனத்தின் விடுதலைக்காக தமது விடுதலைக் குரலை கணீரென்று நெருப்பென அள்ளி வீசினார். அவரது குரல் நாடாளுமன்றத்தில் எப்போதும் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

இந்த நாட்டில் உரிமை மறுக்கப்பட்ட இனத்துக்காக கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் போராடி வயோதிபத்தில் ஓய்ந்தபோதும் பிற்காலத்திலும் அவரது குரல் இனவிடுதலையைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றது. இனத்தின் விடுதலை அவரது இரத்தத்துடன், உயிருடன் இரண்டற இணைந்துவிட்டது.

நான் சார்ந்த சமசமாஜக் கட்சி தமிழ்மக்களின் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கும் - என்றார்.

**சிவாஜிலிங்கம்**

ரெலோ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஒரு தலைமையின்கீழ் செயற்பட வேண்டும் என்பதற்காக கடந்த 20 வருடங்களாகப் போராடிவந்தார் தலைவர் சிவா. இன்று தமிழ்மக்கள் அனைவரும் ஒரு குடையின்கீழ் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய காலம் ஏற்பட்ட நேரத்தில் இந்த மண்ணில் இருந்து அவர் சென்றுவிட்டார். அவர் இன்று நம்மிடையே இல்லை. அவர் கண்ட கனவை நனவாக்க சகலரும் ஒன்றுபட்டு ஒற்றுமையான அணியை உருவாக்க வேண்டும் - என்றார்.

**ஹக்கீம்**

அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் பேசுகையில் கூறியதாவது:-

தலைவர் சிவாவின் தலைமுறையைச் சாராத தலைவராக நான் இருந்தபோதும், முஸ்லிம் சமூகத்தின் சகோதர இனத்தின் தலைவரின் நிகழ்வில் பங்குபற்றுகிறேன்.

வடக்கிலும் கிழக்கிலும் வெளி மாவட்டங்களிலும் வாழும் முஸ்லிம் மக்களின் சார்பில் கலந்துகொண்டு அவர்கள் சார்பில் அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் அங்கு மீளக்குடியமர்ந்த பின்னரே அங்கு செல்வேன் என்று சிவசிதம்பரம் எமது கட்சி மாநாட்டில் கலந்துபேசுகையில் கூறினார். இன்று முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிவசிதம்பரமும் இங்கு வந்துவிட்டார். உயிர் அற்ற நிலையிலேயே வந்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ் இனத்தின் பிரச்சினைகளுக்காக பல்வேறு வடிவில் போராட்டங்களை நடத்திய மிதவாதத் தலைவர்களில் எஞ்சியிருந்த ஒரே தலைவர் சிவசிதம்பரமே. அவரும் இன்று போய்விட்டார் - என்றார்.

இலங்கை தொழிலாளர் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் பேசுகையில் -

தமிழ்மக்களின் இன்னல்களுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் நேரத்தில் முக்கிய தலைவர் ஒருவரை எமது இனம் இழந்து தவிக்கிறது - என்றார்.

மக்கள் கட்சிப் பிரமுகர் எஸ்.ராஜபக்ஷ உரையாற்றுகையில் -

தெற்கும் - வடக்கும் இணைந்து நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நேரத்தில் மூத்த - தீர்க்க தரிசனம் உள்ள - தலைவர் ஒருவரைத் தமிழினம் இழந்து தவிக்கிறது. இவரின் இழப்பு தமிழ்மக்களுக்குப் பேரிழப்பாகும் - என்றார்.

**ராஜா கொளுரே**

கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா கொளுரே பேசுகையில் -

சிவசிதம்பரத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாதபோதும், அவரின் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற கனவை நனவாக்க சகலரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

கடந்த 20 வருடங்களாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நல்ல சந்தர்ப்பம் தற்சமயம் கிடைத்துள்ளது. இந்த நாட்டில் தமிழ்மக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது - என்றார்.

**புத்திரசிகாமணி**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.புத்திரசிகாமணி பேசுகையில் கூறியதாவது:-

மலையக மக்கள் சார்பாகவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பாகவும் அஞ்சலி செலுத்த வந்துள்ளேன். மலையக மக்களின் பிரச்சினையை பற்றி வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்கறை காட்டுவதில்லை என்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பி மலையக மக்களும் தமிழ் இனத்தின் ஓர் அங்கமே என்பதை உறுதி செய்தவர்களில் ஒருவர் சிவசிதம்பரம் ஆவார்.

முன்னர் ஒரு தடவை தனது கணவருடன் இந்தியாவுக்குச் சென்றசமயம் அங்கு சகல தமிழ்க் குழுக்களுடனும் நட்பை ஏற்படுத்த உதவியர் சிவசிதம்பரமே என்ற செய்தியை இங்கு வெளியிடுமாறு ஜனாதிபதி என்னிடம் கேட்டிருக்கிறார் - என்றார்.

இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் பேசுகையில் -

தமிழ்மக்கள் சலுகைகளை அல்ல, உரிமைகளையே கேட்கிறார்கள் என்று நாடாளுமன்றத்தில் அடித்துக்கூறிவந்த ஒரே தலைவர் சிவசிதம்பரமே - என்றார்.

**ஜோசப் பரராஜசிங்கம்**

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பேசுகையில் -

விடுதலைப் போராட்டம் என்கிற நீண்டதூர அஞ்சல் ஓட்டத்தின் இறுதிக்கட்டத்தில் தலைவர் பிரபாகரனும் போராளிகளும் உள்ளனர். அவர்களால் மிகவும் மதிக்கப்பட்ட தலைவர் சிவசிதம்பரம் என்பதைக் கிளிநொச்சியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வின் மூலம் அறியமுடிந்தது. போராளிகளின் உடல்களை மட்டும் வைத்து அஞ்சலி செலுத்தும் மண்டபத்தில் முதன்முதலாக வைத்து அஞ்சலிக்கப்பட்ட தலைவர் சிவசிதம்பரமே ஆவார் - என்றார். (ஐ-3-8)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று தொடக்கம் நாளைமறுதினம் புதன் கிழமை வரை தினமும் காலை 8 மணி தொடக்கம் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள போட்டியாளர்கள் எவராவது இரவு தங்கவேண்டியிருப்பின் உரியவர்களுடைய விவரங்களுடன் தொடர்புகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் த. அருணகிரிராஜா கேட்டுள்ளார்.(எ-51)

# மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து தேவசகாயம்

சாட்டி - 01, வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருசுமுத்து தேவசகாயம் 08.06.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் மாக்கிறேற் அவர்களின் அன்புக் கணவரும் புலேந்திரன் (டோகா), காலஞ்சென்ற லூத்தம்மா மற்றும் தவநாயகம் (பிரதேச செயலகம், வேலணை), அருள்நாயகம், இராசநாயகம் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ரூபிசாந்தா, றதினி எரிக்கா, சகிதாதேவி, யோகமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேஸ்குமார் (வேலணை கால்நடை வைத்தியசாலை), ஜான்சி (டோகா), ஜெனிசிக்கா, ஜதுர்ஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சாட்டி - 01,* தவநாயகம் (மகன்)
*வேலணை கிழக்கு.* (4712) (வேலணை பிரதேச செயலகம்)

## அமரசிங்கம் அன்பழகன்

*(பிரான்ஸ்)*

யாழ். சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அமரசிங்கம் அன்பழகன் 04.06.2002 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் (நாரந்தனை, P.M.) மற்றும் திலகவதி தம்பதிகளின் அன்பு மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*465/3,கே.கே.எஸ்.வீதி,* தகவல்:
*சிவலிங்கப்புளியடி,* அ.திலகவதி
*யாழ்ப்பாணம்.* (4714) (தாய்)

## சின்னத்தம்பி செல்வக்குமார்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி செல்வக்குமார் அவர்கள் 07.06.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.06.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(முன்னர் கொடுக்கப்பட்ட அறிவித்தல் 8ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது)*

*"செல்வ வாசா",* தகவல்:
*பெண்கள் பாடசாலை மேற்கு வீதி,* சி.செல்வநாயகம்
*உடுவில்.* (4715) (சகோதரன்)

## தம்பிப்பிள்ளை சூடாமணி

(பிரபல எழுத்தோவியர் அகிலன்ஸ்)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் 205/2, கண்டி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சூடாமணி அவர்கள் 08.06.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அகிலன் (முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட இறுதி வருட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்), சுகுணா (கலைப்பீட 2ஆம் வருட மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), சியாமா (பழைய மாணவி - யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவனடியான், பரமசிவம், கனகலட்சுமி ஆகியோரின் சகோதரரும் கனகசிங்கம், தர்மகுலசிங்கம் (யாழ். மாநகரசபை), பரமேஸ்வரி, காலஞ்சென்ற அருளம்பலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2002) திங்கட்கிழமை பி.ப. 5.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஜெயாஸ் வீடியோ,* சூ.அகிலன்
*கைலாசபிள்ளையார் கோயில் சந்தி,*
*351, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.* (மகன்) (4716)


**ஸ்ரீ மஹோற்சவ பத்ததி**

(விநாயகர், சிவன், தேவி, சுப்ரமணியர் ஆகிய மூர்த்திகளின் பத்ததி தொகுப்பு)

*கிடைக்குமிடம்:* வை.பாலசுந்தரக் குருக்கள்,
சோதிட விலாச புத்தகசாலை, ஸ்ரீ பொன்னம்பலவாணேசர்
46, பெரிய கடை, தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம். 38, இராமநாதன் றோட்,
(4711) கொழும்பு ~ 13.



உ

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய வீதி

**ஆலடி விநாயகர் தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்தி விஞ்ஞாபனம்**

*விநாயகர் அடியார்களே!*

நாளை (11.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு சகஸ்ரசத (1008) சங்காபிஷேகமும் விசேட பூசையும் 11.00 மணிக்கு மாகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும்:

மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையாகி பஞ்சமுக அர்ச்சனையும் திருவூஞ்சலும் நடைபெற்று பூந்தண்டிகையில் விநாயகர் திருவீதியுலா நிகழும். *அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

*புகையிரத நிலைய வீதி,* - மகினன் குடும்பம்.
*யாழ்ப்பாணம்.* (4713)



**கண்ணீர் அஞ்சலி**

எமது சங்கத்தின் செயலாளர் திரு.S.அகிலன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**தம்பிப்பிள்ளை சூடாமணி**

அவர்கள் காலமானதையிட்டு துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*யாழ்.மாவட்ட* தலைவரும்
*கூடைப்பந்தாட்டச் சங்கம்* (C/22460) உறுப்பினர்களும்.



**நாகம்ஸ்** சுன்னாகம்

இளைய தளபதி விஜய்,
உலக அழகி பிரியங்கா சோப்ரா,
விவேக்
நடித்த
**தமிழன்** (சிலஸ்)
காட்சிகள்: 11.00,2.00,6.30 (புதிய நேரம்) (4636)



**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜயகாந்த், லைலா,
மணிவண்ணன்
**கள்ளழகர்**
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C/22356)



**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
இன்றுமுதல்
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
**ரோஜாக்கூட்டம்** (சிலஸ்)
தினசரி: 11.00, 2.30, 6.30 (பு.நே.) (C-22357)

# ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்தை விரும்பியவர்

## அமைச்சர் கரு ஜெயசூரிய அஞ்சலி

ஐக்கிய இலங்கைக்குள் சமாதானம், ஒற்றுமை ஏற்படவேண்டுமென விரும்பியவர் அமரர் சிவசிதம்பரம்.

மூத்த அரசியல் தலைவர் மு.சிவசிதம்பரத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்திய மின்சக்தி, வலு அமைச்சர் கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான, ஒன்றுமையான தீர்வு ஒன்று ஏற்படவேண்டும் என்று சிவசிதம்பரம் விரும்பினார். அதற்காகப் போராடியும் வந்தார். அவர் கண்ட கனவை நிறைவேற்ற, ஐக்கிய இலங்கைக்குள் நல்ல தீர்வொன்றை நாம் காணவேண்டும். அதுவே அவருக்கு நாம் அளிக்கும் அஞ்சலியாக இருக்கும்.

அவர் விரும்பிய ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வு வெகுதூரத்தில் இல்லை. அத்தகைய தீர்வைக்கணடு அவருக்கு அஞ்சலிப்போம் .- என்றார்.

**இளம்பரிதி**

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி கூறியதாவது:-

உலகில் மனிதன் பிறக்கிறான், பின்னர் இறக்கிறான். இறந்தும் இறக்காதவர்களாக சிலர் வாழ்கின்றனர். மக்களுக்காக வாழ்பவர்கள் மக்களால் நினைவு கூரப்படுவர். வரலாறு நினைவுகூரும்.

தந்தை செல்வாவின் காலத்துக்குப் பின்னர் சிவசிதம்பரம் ஐயா கூறிவந்த கருத்துக்களே போராட்டத்துக்கு உந்துசக்தியாக அமைந்தன. இந்தப் போராட்டத்துக்கு அடித்தளம் இட்டவர்களில் இவரும் ஒருவர்.

விடுதலைப் போராட்டம் இன்று முக்கிய வரலாற்றுக் கட்டத்தில் நிற்கும்போது, அவர் மறைந்து விட்டார். ஒரே தலைமையில் தமிழ், முஸ்லிம் இனங்கள் இணைய தலைவர் பிரபாகரன் எடுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்.

மக்கள் இன்று சோகத்தில் ஆழ்ந்திருந்தாலும் எழுந்து நிற்போம் என்பதை உலகுக்கு உணர்த்துவோம் - என்றார்.

**இரா.சம்பந்தன்**

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் பேசுகையில்:-

தமிழ் மக்கள் ஒரு குடைக்கீழ் ஒன்றுபட்டு செயற்பட்டால்தான் தீர்வை ஒட்டுமொத்தமாகப் பெறலாம் என்று அன்றுதொட்டு வற்புறுத்திவந்தவர் இவர். இன்று தலைவர் பிரபாகரன் தலைமையில் ஒரே குடையில் இவர் கண்ட கனவு நிறைவேறும்போது எம்மைவிட்டுச் சென்றுவிட்டார் - என்றார். (எ-3-8)

### மட்டக்களப்பிலிருந்து ஆதரவு

நாளை மறுதினம் யாழ். குடாநாட்டில் நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பு மாவட்ட பொது நிறுவனங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. (எ)

### அடைக்கலநாதனின் பாரியார் காலமானார்

வவுனியா,ஜுன்10

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பாரியார் திருமதி சந்திரா அடைக்கலநாதன் (வயது 45) நேற்று முன்னிரவு சென்னையில் காலமானார்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டு கடந்த சில மாதங்களாக சென்னையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிசசை பலனளிக்காத நிலையில் நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (எ)

### ஆயிரக்கணக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ள வந்திருந்தனர்.

அரசு பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை வசித்துவந்த அமைச்சா கரு ஜெயசூரியவும் அமைச்சர்களான ஜயலத் ஜயவர்த்தன, தி.மகேஸ்வரன், ஏ.எச்.எம்.அஸ்வர், ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முற்பகல் 11 மணியளவில் வந்து சேர்ந்தனர்.

கரவெட்டி அத்துளு நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பிற்பகல் 2.30 மணிவரை அஞ்சலி உரைகள் நீடித்தன. பின்னர் அங்கிருந்து சோனப்பு மயானம் நோக்கி இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

மலர்மாலைகள் மலைபோலக் குவிந்து காணப்பட்ட அமரரின் பேழையை அலங்கரிக்கப்பட்ட வாகனம் சுமந்து சென்றது.

'பான்ட்' வாத்தியக்குழுவினரும் பொலீஸ் வாகனங்களும் முன்னே சென்றன. தொடர்ந்து அரசியல் பிரமுகர்களும் கட்சித் தலைவர்களும் பொதுமக்களும் ஊர்வலமாகப் பின் தொடர்ந்தனர்.

தலைவர் சிவசிதம்பரத்தின் நீண்ட அரசியல் பயணத்தின் முடிவாக இறுதி ஊர்வலம் மயானத்தை அடைந்தது.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்டிருந்த சிதையில் சடலப் பேழை வைக்கப்பட்டது.

சிதைக்குத் தீ மூட்டப்பட்டவேளை அங்கு நிலவிய கனத்த மௌனம் நெஞ்சைப் பிசைவதாய் இருந்தது. (ஐ-3-8-31-173)



நேற்றைய இறுதிச்சடங்கின்போது அமைச்சர்களான ஜயலத் ஜயவர்த்தனா, கரு ஜெயசூரிய, எம்.எச்.எம்.அஷ்வர் மற்றும் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், எம்.புத்திரசிகாமணி, வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் அமரர் சிவசிதம்பரத்தின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

### மீனவரின் மறியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகம் முன்பாக மீனவர்கள் மறியற் போராட்டம் நடத்திவருவது தெரிந் ததே.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமைச்சர்களான கரு ஜெயசூரியா, ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோரை தமது சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் -

மீன்பிடித்தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால் நாடாளுமன்றமே அதுபற்றித் தீமானிக்க வேண்டும் என்றும் -

பாஸ் நடைமுறை, வெளியிணைப்பு இயந்திரம் பாவித்தல் என்பன தொடர்பாக பலாலி கூட்டுப்படைத் தளபதியுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடுமாறும் -

அமைச்சர்கள் தமது குழுவிடம் தெரிவித்ததாகவும் -

சமாசத் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனின் உதவியுடன் படைத தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தும்வரை மறியற்போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-51)

### இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான், இந்தியா ஆகியவையும் அடங்கும். இரசாயன ஆயுத சாசனத்தில் ஒப்பமிடாத நாடுகளுக்கும் பிரிட்டன் இநதத் தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்துவருகிறது.

- இவ்வாறு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. (ஐ)

### இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே பேச்சு நடத்தி அவரது இணக்கத்தைப் பெற்றுக்கொண்டார் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)


ஓம்
சக்தி



**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி**
**அமுதசுரபி அன்னதான சபை**

**புதிய அன்னதான மண்டபத் திறப்பு விழா**

*அம்பிகை அடியார்களே!*

எமது சபையினரால் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதியுதவியுடனும் தர்ம கொடைவள்ளல்களின் பேருதவியுடனும் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற அமுதசுரபி அன்னதான மண்டபத்தை நிகழும் சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் இன்று (10.06.2002) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குத் திறந்து வைக்க அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருள் கூடியுள்ளது. அத்தருணம அடியார்கள் அனைவரையும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்: திரு.தம்பிமுத்து சிவானந்தன் அவர்கள்
(தலைவர் அமுதசுரபி அன்னதான சபை)

பிரதம விருந்தினர்: உயர்திரு.செல்லையா இரத்தினம் அவர்கள்
(பிரதேச செயலாளர்-தீவுகள் தெற்கு, வேலணை)

கௌரவ விருந்தினர்: உயர்திரு. E.S.P.நாகரெத்தினம் அவர்கள்
(உரிமையாளர்-E.S.பேரம்பலம் அன் கோ, யாழ்.)
உயர்திரு. ச.கைலாசபிள்ளை அவர்கள்
(உரிமையாளர்-நியூ கமல் செரமிக்ஸ் சென்ரர், யாழ்.)
உயர்திரு. குழந்தைவேல் அவர்கள்
(உரிமையாளர்-அம்பிகை களஞ்சியம், யாழ்.)

அன்றைய தினம் புதிய மண்டபத்தில் பிரபல வர்த்தகர் திரு. E.S.பேரம்பலம் அவர்களால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபையினர்,
நயினாதீவு.

*அமுதசுரபி மண்டபம்,*
*நயினாதீவு - 2.*

(C/22463)



**உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**



வளலாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளி/மாசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முன்னாள் பதில் அதிபருமாகிய

**திரு.துரைரத்தினம் ஸ்ரீகனகசபேசன்**

*B.A., H.N.D.C., Dip.in Ed., M.Phil. in Education*

அவர்கள் கல்வியலில் முதுதத்துவமாணி (M.Phil.) பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில 29.11.2001இல் பெற்றுக்கொண்டமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

*கிளி மாசார் அ.த.க.பாடசாலை,*
*பளை.*

(சி-22457)



**NEW SCIENCE HALL**
**PHYSICS**
பரீட்சை எடுத்த
& வெளிமாவட்ட
மாணவர்களுக்கு -
"சடப்பொருள் இயல்புகள்"
நேரம்:
செவ்., வியா.: 9↔11 a.m.
ஆரம்பம்:
11-06-2002
(4710)
By:-R.குகன் (B.Sc.)



**ஓவியப் பயிற்சி**
ஓவியம் பயில
ஆர்வமுள்ளவர்கள்
தேவை.
*பயிற்சிக் காலத்தில்*
*ஊக்குவிப்புப் பணமாக*
*1500ரூபா வழங்கப்படும்.*
விவரங்களுக்கு: (4703)
**யசோ**
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.



**G.C.E. O/L - 2002**
PAPER CLASS
**SCIENCE**
ஆரம்பம்: 10.06.2002
அலைகளும் அதிர்வும்
*E.J.K.யுபன்*
**I.B.S. INSTITUTE**
*(Chundikuli)*
தனிப்பாட அனுமதிகள்
வழங்கப்படும். (4701)



**ENGLISH**
**SPOKEN AND GRAMMAR**
**புதிய பிரிவு ஆரம்பம்**
**By: BRITTO**
இடம்: கோக்குவில்
(ஞானபண்டிதா பாடசாலைக்கருகில்)
நாள்: 12.06.2002
புதன்கிழமை
நேரம்: காலை 8.30 மணி (ம.நே.)
(C/22449)



**NEW SCIENCE COLLEGE**
*JAFFNA*
PHYSICS
By: M.KARUNANITHY
2004 A/L
அலைகளும் அதிர்வுகளும்
புதிய பிரிவு: Sat., Sun. 9.00-10.00
ஆரம்பம்: 15.06.2002
**DAY CLASS**
(அலகு ரீதியான மீட்டல்
வினாவிடை வகுப்பு)
பிரிவு I: TUE., THU.
6.45 - 7.45 (a.m.)
ஆரம்பம்: 11.06.2002
பிரிவு II: SAT., SUN.
10.00 - 11.00
ஆரம்பம்: 15.06.2002
(4685)



**கண்ணீர் அஞ்சலி**

இணுவில் தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க
முன்னாள் தலைவரும்
இணுவில் பொதுநூலக ஆலோசகரும்
உள்ளூராட்சி மன்ற ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமாகிய

**கந்தையா அம்பலவாணர்**

அவர்கள் (06.06.2002) காலமான செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு எமது அஞ்சலியை சமர்ப்பிப்பதோடு அன்னாரது இழப்பால் துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இணுவில் தென்மேற்கு
கிராம அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் பொதுநூலகம்,
கிராம அலுவலர் J/188.

(C/22462)



**மரண அறிவித்தல்**

**வேலுப்பிள்ளை கந்தையா**

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்றுமுன்தினம் (08.06.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

தகவல்:
க.குணரத்தினம் (மகன்)

(4717)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.